Registered No. M-4483 Madras War Review (TAMIL) 7-4-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-ம் ௵ ஏப்ரல் ௴ 7௳, வெள்ளிக்கிழமை இதழ் 31

ஜப்பானை அழிக்கிற வரை அமைதி இல்லை

ஜெர்மனியைத் தோற்கடித்த பிறகு, பிரிட்டனின் முழு பலமும் யுத்தத்தில் ஜப்பானுக்கு விரோதமாகப் பயன் படுத்தப்படும். ஜெர்மனியோடு நாம் முடிவாகக் கணக்குத் திர்த்துக் கொள்ளும் நாள் வருகிறபோது, நமது கடமையை நாம் அரைகுறையாகத் தான் செய்திருக்கிறோ மென்று, நாம் தெரிந்து கொள்ளுவோம். நமது இன்னொரு காட்டு மிராண்டித் தனமான எதிரி அடியோடு நாசமாகும் வரையிலும், அமைதியோ ஓய்வோ இருக்க முடியாது.

—பீல்ட் மார்ஷல் சர் ஜான் டில்,

வாஷிங்டனில் எப்ரல் மாதம் 3-ம் தேதி கூறியது.

பொருளடக்கம்.

	பக்கம்.		பக்கம்.
முகப்புப் படம் : பீல்ட் மார்ஷல் சர் ஜான் டில் ..	1	இசை மூலமாக யுத்த முயற்சி	5
ஜப்பானை அழிக்கிற வரை அமைதி இல்லை ..	1	குள்ளனின் வாலாட்டம்	6
யுத்த காலத்தில் அரசாங்க உதவி	2	யுத்தமும் பெண்கள் தொண்டும்	7
சுபேதார் சுப்பிரமணியத்திற்குப் பாராட்டு	2	சீமைக்களின் சிறந்த கொடை	8
தலையங்கம் : வீரர் பெருமை	3	பர்மாவில் இந்திய விமானப் படை	9
சிறு கதை : திரு. சிவராம், பி.ஏ.	4	யுத்த நாட் குறிப்புக்கள்	12

யுத்த காலத்தில் அரசாங்க உதவி

ராமநாதபுரம் ஜில்லா—உணவுப் பிரச்சினை.—அரிசிப் பங்கீடுத் திட்டம் விருதுநகரில் 6-2-44-லும், ஸ்ரீவில்லிப்புத்தூர், காரைக்குடி முதலிய இடங்களில் 20-2-44-லும், தேவகோட்டையில் 27-2-44-லும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. ராஜபாளையத்திற்கு போதுமான அரிசி ஸ்டாக் செய்யப்பட்டு வருகிறது. கூடிய சீக்கிரம், பங்கீடுத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படும்.

ராமநாதபுரம் ஜில்லாவில் உணவுப் பொருள்களை அதிகமாகப் பயிர் செய்ய ஜில்லா கலெக்டரவர்கள் பெரு முயற்சி எடுத்து வருகிறார்கள். இதற்கென ஜில்லா உணவுக் கமிட்டி ஒன்று ஏற்படுத்தி நடவடிக்கைகள் எடுத்து வரப் படுகின்றன. ஒவ்வொரு தாலூகாக்களிலும் முக்கிய விவசாயிகள் மகாநாடு கூட்டி, உணவுப் பொருள்களை எந்தெந்த விதத்தில், எப்படி அதிக சாகுபடி செய்யலா மென்று விவாதிக்க வேண்டு மென்று, உணவுக் கமிட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. அதன்படி 26-2-44-ல் கலெக்டரவர்கள் தலைமையில் ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலூகாவில் முக்கிய விவசாயிகள் மகாநாடு கூடியது. இவ்வூர் மண்ணுக்கேற்ற நெற் பயிர், சோளம் நிலக்கடலை முதலியவைகளை, நல்ல வித்துக்கள் எடுத்துப் பயிர் செய்ய வேண்டு மென்ற விவசாய அதிகாரியின் திட்டத்தை விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. விஞ்ஞான முறையில் செய்யப்பட்ட விவசாயக் கருவிகளையும், உரங்களையும் உபயோகப்படுத்த வேண்டு மென்றால், சர்க்காரிட மிருந்து 'தக்காவி கடன்' (Takavi loans) வாங்கி கிணறு முதலியவைகள் வெட்டி சாகுபடியை அதிகப்படுத்த வேண்டுமென்றும் எடுத்துக் காட்டப் பட்டது.

யுத்தங் காரணமாக பர்மா மலேயாவிலின்றும் வெளியேறினோர் பிரச்சினை.—யுத்தங் காரணமாக வெளியேறி இந்தியாவுக்கு வந்துள்ளவர்களுக்குத் தொழில் கொடுக்கும்படி ஏற்பட்ட Test works, கவர்ன்மெண்டார் உத்தரவின் பேரில் மூடப்பட்டு விட்டது. இதில் வேலை பார்த்தவர்களுக்கு, இப்பொழுது படி கொடுக்கப் பட்டு வருகிறது.

பரமக்குடியிலும், முதுகுளத்தூரிலும். இதுவரைக்கும் படிவாங்காதவர்களைக் கூப்பிட்டு, அவர்களுடைய மனுக்களை வாங்கி, முதுகுளத்தூர் டிப்டி தாசில்தாரிடம் கொடுத்து, சீக்கிரம் விசாரித்து நடவடிக்கை எடுக்கும்படி ஜில்லா கலெக்டரவர்களால் உத்தரவு செய்யப்பட் டிருக்கிறது.

தேசீயப் போர் முனை அதிகாரிகளும் அவர்களுடைய நலன்களை நன்கு விசாரித்து வருகிறார்கள்.

தென்னாற்காடு ஜில்லா—நியாய விலைக் கடைகள்.—தென்னாற்காடு ஜில்லாவில் விழுப்புரம், கூடலூர் போன்ற நகரங்களிலும், வானூர், கோட்டகுப்பம் போன்ற சிறு நகரங்களிலும் நியாய விலைக் கடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவைகளில் அரிசி பிரதானமாக விற்கப்படுகிறது. விழுப்புரம் நியாய விலைக் கடையில் அரிசி, கேழ்வரகு போன்ற உணவுப் பொருள் மட்டு மல்லாமல், மிளகு, கோதுமை முதலிய முக்கியப் பொருள்களும், அடக்க விலைக்கே விற்கப் படுகின்றன.

வானூர் ஒரு சிறு நகரம். கோட்டைகுப்பம் பிரெஞ்சு எல்லையை அடுத்தது. இப்படிப்பட்ட இடங்களில் நியாய விலைக் கடைகள் மூலம் பொருள்கள் சுலபமாகக் கிடைப்பது மல்லாமல், நியாயமான விலைக்குக் கிடைக்கின்றன. கொள்ளை லாபத்திற்கு விற்கும் பொருள்களை வாங்கி வாடி நின்ற ஏழைகள், இன்று கிரமமான விலைக்குக் கிடைக்கும் வஸ்துக்களை வாங்க குதூகலத்தோடும் கூட்டம் கூட்டமாகவும் வருகின்றனர்.

இந்த நியாய விலைக் கடைகளின் கணக்கு விவரங்களைச் சரிவர எழுதி வைத்தல், தேவைகளை முன் கூட்டியே யோசித்துப் பொருள்களை வரவழைத்தல், விற்பனை விநியோகத்தில் ஒழுங்கீனம், அதிருப்தி முதலியன ஏற்படாதிருக்க உதவுதல், ஆகிய அடிப்படையான சேவைகளை உள்ளூரிலிருக்கும் கனவான்களே ஊதிய மில்லாமல் செய்து வருகிறார்கள்.

இந்த ஜில்லாவின் முனிஸிபல் நகரங்களில், அரிசிப் பங்கீடு சமீபத்தில் அமுலுக்கு வரும். இந்தப் பங்கீட்டு எல்லையில் இருக்கும் நியாய விலைக் கடைகள் இனி, பங்கீட்டு அரிசி விற்பனைக் கடைகளாகச் சேவை செய்யும்.

நியாய விலைக் கடைகளினல் பொது மக்களுக்கும் சிறப்பாக ஏழைகளுக்கும் ஏற்படும் நன்மைகளை இந்த ஜில்லா வாசிகள் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். அதனால் புதிதாக இப்படிப்பட்ட கடைகள் திறக்கப்பட வேண்டு மென்று அனேக இடங்களி லிருந்து விண்ணப்பங்கள் வருகின்றன. இந்த யுத்த நெருக்கடியில் அரசாங்கத்தார் பொது ஜனங்களுக்குச் செய்யும் பேருதவியில் "நியாய விலைக் கடைகள்" குறிப்பிடத் தக்கவை.

சுபேதார் சுப்பிரமணியத்திற்குப் பாராட்டு

கடமையை நிறைவேற்று வதிலும் தியாகஞ் செய்வதிலும், சுபேதார் சுப்பிரமணியத்தை மிஞ்சக் கூடியவர்கள் உண்டு என்று நான் நினைக்கவில்லை. அவர் காசினோ போர் முனையில் பிறர் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு, தன் உயிரையே தந்தார். சென்னைவாசிகள், கடமையை நிறைவேற்றுவதிலும், இராஜ விசுவாசத்திலும், தியாகத்திலும் பரம்பரையாகப் புகழ் வாய்ந்தவர்கள். சென்னைப் படையின் சரித்திரமும் அதன் பழம் பெருமையும் பின் பற்றத் தக்கன.

—சர் ஹ்யூ ஹூட், சென்னை கவர்னர் ஆலோசகர், சென்னை துளுவ வேளாளர் உயர்தரக் கலாசாலையின் 89-வது ஆண்டு விழாவின் போது, ஏப்ரல் மாதம் 3-ம் தேதி கூறியது.

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV | 1944-ம் ஏப்ரல் 7உ, வெள்ளிக்கிழமை | இதழ் 31

வீரர் பெருமை

வீரன் எதைச் செய்யப் புகுந்தாலும், நன்கு ஆலோசித்துத் தான் அதைச் செய்யப் புகுவான். ஆரம்பித்த பிறகு அதினின்று பின் வாங்குவது என்பது அவனுடைய இலக்கணத்தில் இல்லை. அது பற்றித் தான் "எண்ணித் துணிக கருமம், துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு" என்று கூறினர் திருவள்ளுவரும். இடையே எப்படிப்பட்ட இடையூறுகள் நேரினும், கொஞ்சமும் நெஞ்சந் தளராது நிமிர்ந்து நின்றே செயலாற்றுவான். இதுபற்றித் தான், "மெய்வருத்தம் பாரார், பசி நோக்கார், கண்துஞ்சார், எவ்வெவர் தீமையும் மேற் கொள்ளார், செவ்வி அருமையும் பாரார், அவமதிப்புங் கொள்ளார், கருமமே கண்ணாயினர்" என்று ஆன்றோர்கள் கூறினர்கள். இத்தகைய வீரர்களின் சிறப்புக்கள் மிளிர்வதற்கு, இந்த யுத்தம் சிறந்ததோர் வாய்ப்பாக இருக்கிறது. இந்த வீரர்களின் புகழொளி உலகின் எட்டுத் திக்குகளிலும் வீசுகின்றது. உதாரணமாக ஜெனரல் விங்கேட்டின் சிறப்புக்களை எடுத்துக் கொள்ளுவோம். அவர் தன் படைகளைக் காடுகளிலும், மலைகளிலும், பள்ளத் தாக்குகளிலும், ஆறுகளிலும் கடத்திச் சென்றார். பர்மா காடடர்ந்த மலை நாடல்லவா? ஜப்பானியர்கள் அதை வயப்படுத்திக் கொண்டு இந்தியா மீது தன் நாட்டத்தைச் செலுத்திக் கொண்டிருக்கும் போது, ஜெனரல் விங்கேட் தன் படைகளைச் செலுத்திக்கொண்டு போய், பல இடங்களில் கடுமையாகப் போர் புரிந்தார். இவர் ஆற்றியுள்ள வீரச்செயல்கள் பல. பல இடங்களில் ஜப்பானியப் படைகள் இவருடைய தாக்குதல்களுக்கு ஆற்ற மாட்டாமல் ஓட்டம் பிடித்தன. இவர் தன் விடா முயற்சியினாலும், பிடிவாதத் தன்மையாலும் பலவகைக் கஷ்டங்களையும் சகித்துக் கொண்டு, ஜப்பானியர்களோடு போராடினார். இந்தப் போராட்டத்தில் அவர் செய்த சாகசங்கள் பல. அவருடைய புகழொளி உலகெங்கும் வீசத் தலைப்பட்டது. அவர் புகழ் மேலும் ஓங்கச் செய்யத் தக்கபடி அவர் போர் முனையில் மாண்டார். அவர் எதிரிகள் கையிற் சிக்கி மாளவில்லை யென்பது இங்கே குறிப்பிடத்தக்கது; ஆனால், அவர் ஏறிச் சென்ற விமானத்திற்கு விபத் தேற்பட்டதன் பயனக, அவர் உயிர் துறக்க நேர்ந்தது. அவருடைய அருந் திறனைப் பாராட்டி, மேன்மை தங்கிய லார்ட் லூயி மௌண்ட் பேட்டன் பிரபு, அவருடைய படையினருக்கு விடுத்த செய்தியில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்:—

"தனக்கு வெற்றி வகை கிடைக்கும் தருணத்தில் தான் ஜெனரல் விங்கேட் காலமானார். எக்காரியத்தையும் தாட்டீகத்தோடும் ஊக்கத்தோடும் செய்யக்கூடிய பலர், இந்த யுத்தத்தினால் தயாரானார்கள். அவர்களுள் ஒருவர் தான் ஜெனரல் விங்கேட். படையினர் விரும்பத் தக்க, தலை சிறந்த ஊக்கம் நிறைந்த ஒரு தலைவரை, நீங்கள் இழந்து விட்டீர்கள். என் சொந்த நண்பரையும், நன்றியுள்ள ஆதரவாளரையும் நான் இழந்து விட்டேன்."

"அவர் தீயைப் பொருத்தி விட்டார். நாம் அந்த வர்த்தியை ஏந்தி, ஒருமுகமாக முன் செல்லுவோம். நீங்கள் மகா வீரத்தோடும் மிகக் கஷ்டப்பட்டும் ஜப்பானியர் வசமுள்ள நாடுகளுக்குள் புகுந்து கடுமையாகப் போராடுவதன் மூலந் தான், நாம் மீண்டும் பர்மாவை முடிவாகக் கைப்பற்றி விடக் கூடும். ஜப்பானியர்களையும் அடியோடு தோற்கடிக்கவும் முடியும். அவர் உங்களைக் குறித்து பெரிதும் பெருமிதங் கொண்டிருந்தார். அவர் எதிர்பார்த்தபடி நீங்கள் நடந்து கொள்ளுவீர்க ளென்று எனக்குத் தெரியும்."

மற்றொரு வீரரைக் குறித்தும் இங்கே ஒரு சிறிது கூறுவது பொருத்தமாகும். இந்த வீரர் ஒரு இந்தியர்; தமிழர்; செங்கற்பட்டு ஜில்லா வாலாஜாபாதைச் சேர்ந்தவர். இவர் தான் சுபேதார் சுப்பிரமணியம். மைனர்ஸ் அன் சாப்பர்ஸ் படையைச் சேர்ந்தவர். இத்தாலியில் காசினோ என்றொரு இடமிருக்கிறது. இங்கே ஜெர்மன் படைகளுக்கும் நேச நாட்டுப் படைகளுக்கும் கடுமையான போராட்டம் நடந்து கொண்டிருந்தது. அப்போது சுபேதார் சுப்பிரமணியத்தின் ஆணைக்குட்பட்ட படையினர், சுரங்க வெடிகளை அப்புறப்படுத்தும் வேலையில் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் வேலையை மேற்பார்வையிடும் பொருட்டு, சுபேதார் சுப்பிரமணியம் அங்கே சென்றார். அச்சமயம், ஒரு சுரங்க வெடியில் ஒரு நாயிக் இடறினர். அதன் பயனாகத் தீ பற்றுவதை, சுபேதார் சுப்பிரமணியம் கண்டார். ஒரு விநாடியும் தாமதிக்காமல் அந்த வெடி குண்டின் மேல் தானே பாய்ந்து அதைக் கெட்டியாகக் கட்டிக் கொண்டார். வெடிகுண்டு வெடித்தது. அவர் உடல் சிதறியது. உயிர் துறந்தார். வீர சுவர்க்கம் அடைந்தார். தியாக உணர்ச்சி அவரை உந்தியது. தன் உயிரைவிட மன்னுயிரே மிகப் பெரிது, அரிது என்னும் கொள்கைக்கு, ஒப்புயர்வில்லாச் சான்றானார். அவர் அவ்வாறு தன் உயிரைத் தியாகம் செய்திருக்கா விட்டால், அந்தப் படைத் தலைவரும் படை முழுதுமே பெருஞ் சேதத்திற்கு ஆளாகி யிருக்கும். "தனக்கென வாழா பிறர்க் குரியாள"ரின் தகைமை, இவரிடம் தெளிவாகத் துலங்கியது. இவருடைய புகழ் மணம் படையினர் ஒவ்வொருவருடைய மனத்திலும் ஊக்க மெனும் தீயை மூட்டியிருக்கிறது. தமிழ் மக்களின் பண்டைய வீரத்தனம் சிறிதும் தணியவே யில்லை யென்பதற்குச் சான்றாக விருக்கின்றது இவருடைய அருஞ் செயல். உலகம் வியக்கும் இவரது உயரிய வீரத் தியாக உள்ளம், ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் பிரதிபலிக்கும் என்று நம்புகிறோம்.

திரு. சிவராம், பி. ஏ.,

"கோவை கிழார்" எழுதிய சிறு கதை

(யுத்த சஞ்சிகைக்குப் பிரத்தியேகமாக எழுதப்பட்டது).

சிவராம் பி.ஏ., தேறிவிட்டான். பெற்றோர்கள் ஏழைகள். ஆனபடியால் மேலே வாசிக்க முடியவில்லை. ஒரு வேலை சம்பாதிக்க முயன்றான். பல ஆபீசுகளில் நுழைந்தும் ஒன்றும் பலிக்கவில்லை. இறுதியில் ஒரு நண்பன் மூலமாக வட நாட்டில் ஒரு இருப்புப்பாதை கம்பெனியில் போய்ச் சேர்ந்தான். சிவராம் புத்திசாலியானதனால் அங்குள்ள அதிகாரிகள் அவனுக்கு உயர்ந்த பதவி கொடுக்க இசைந்தார்கள். நிலைய அதிகாரி (ஸ்டேஷன் மாஸ்டர்) உத்தியோக வேலை போதிக்க ஒரு பாடசாலை இருந்தது. அதில் அவனைச் சேர்த்துக் கொண்டார்கள். 6 மாதங்களுக்குள் அப் படிப்பை கற்றுக் கொண்டு பரீட்சையிலும் தேறினான். உடனே 3-ம் வகுப்பு ரயில் அதிகாரியாக நியமித்து ஒரு மலைப் பிரதேசத்தில் ஒரு ரயில் நிலையத்தில் அமர்த்தினார்கள். மாதம் ரூ. 75 சம்பளம் கிடைத்தது. வெகு ஆனந்தத்துடன் வேலையில் போய்ச் சேர்ந்தான்.

மலைக் காட்டில் ரயில் நிலையம்

சிவராம் போய்ச் சேர்ந்த நிலையம் ஒரு மலைப் பிரதேசம் என்றோம். மலைகளோ அடர்ந்திருந்தன. பகலில் வெய்யிலோ பொறுக்க முடியாது. இரவில் குளிரும் அப்படியே. நல்ல தண்ணீர் கிடைப்பது அரிது. அருகில் ஊர் இல்லை. சில மலைகள், குடிசைகள் தான் இருந்தன. சாப்பாட்டு வசதிகள் இல்லை. ஊரிலிருந்து சமையல் ஆள்பிடித்துக் கொண்டு தான் வர வேண்டும். சிதோஷ்ண நிலையைப் பாாத்துவிட்டு, எவரும் அங்கே இருக்கவும் மாட்டார். ஆகவே, அங்கு அமையும் அதிகாரிகள் எல்லாம் தாங்களே சமையல் செய்துகொள்ளவேண்டும். அல்லது சமையல் செய்யக் கூடிய ஆளைப் பார்த்து வேலையில் அமர்த்திக் கொள்ளவேண்டும். சிவராம் புதிதானவனாகையினால் தானே சமயல் செய்து தன் வேலையை நடத்தி வந்தான். இவ்வாறு எவ்வளவு நாள் கழிக்கக் கூடும். இரண்டு மூன்று மாதங்களில் தன் வீட்டு ஞாபகமும் வந்தது. தாய் தந்தையரைக் காணவேண்டும் என்ற ஆசை தோன்றிற்று. மேலும் வயதாகிவிட்டதினால் தான் திருமணம் செய்துகொண்டு பிழைக்க வேண்டும் என்றும் எண்ணினான். தன் சொந்தத்தில் ஒரு அழகான படித்த பெண் இருந்தாள். அவள்பேரில் மோகம் அதிகம். ஊருக்குச் சென்று அவளை மணந்து கொண்டு வேறு ஒரு நல்ல இடத்திற்கு மாற்றிக்கொண்டு செல்லலாம் என்று எண்ணினான். அடிக்கடி இரவில் இதே எண்ணம் அவனுக்கு வரும். பகல் வேளைகளில் வேலை செய்துகொண்டே இருந்ததினால் அதிக சிரமம் இருக்காது. நியமித்த ஆட்களோ நல்லவர்கள். ஆகவே, சிரமமில்லாது தன் காரியங்களை நடத்தி வந்தான். இவ்வாறு இரண்டு வருடம் கழிந்தது. தன் உத்தேசம் ஒன்றும் நிறைவேற வில்லை.

மாற்றிக் கொள்ள வழியில்லை

வேறு இடத்திற்கு மாற்றிக் கொள்ள மனு கொடுத்தான். அது உத்தரவாகவில்லை. விடுமுறை கேட்டான்; அதுவும் கிடைக்கவில்லை. வேலையை விட்டுவிடலாமோ என்றும் சிலவேளை எண்ணுவதுண்டு. அவனுடைய வேலையாட்களிலே 3-ல், இரண்டு பேர் அவன்மீது மிகவும் பிரியமா இருப்பார்கள். அவர்கள் இவனை, இந்த ஊரை விட்டுப் போகவே கூடாதென்று போதித்தார்கள். அடுத்த குக்கிராமத்தில் இருந்த மலையர்களுக்கு சிவராமின் மீது மிகுந்த பிரியம். அவர்களை மிகுந்த அன்போடு சிவராம் உபசரித்தான். ஆகவே மனிதர்கள் விஷயத்தில் யாதொரு குறையும் இல்லை. ஆனால் வெளி நாகரிகமும் பகட்டும் சிவராமுக்குச் சிறிதும் கிடைக்கவில்லை.

யாதொரு பயனும் இல்லாத இந்த மலைப்பிரதேசத்தில் ஒரு ரயில் நிலையம் ஏற்பட்டதற்கு ஒரு காரணம் உண்டு. இருபுறமும் 10 கல் அளவில் யாதொரு நிலையமும் கிடையாது. மேலும் இந்த நிலயத்திற்கு அருகில் ஒரு பெரிய பள்ளத் தாக்கும் அதன் மேல் ஒரு பெரிய பாலமும் அதனை அடுத்து ஒரு நீளமான குகைப் பாதையும் இருந்தன. அப்பாலத்திற்கும் குகைப் பாதைக்கும் ஆக பல இலட்சக் கணக்கான ரூபாய்களை ரயில்வே கம்பெனியார் செலவழித்திருக்கிறார்கள். அவைகளைப் பாதுகாக்கவே ஒரு நிலையம் அருகில் ஏற்படுத்தப்பட்டது. இவ்விரண்டு பாகங்களையும் தினந்தோறும் மேற்பார்வை இட வேண்டியது சிவராமின் முக்கிய வேலை. பாலம் சிறிதும் பழுதுபடாமல் இருக்கிறதா என்று கூர்ந்து பார்க்கவேண்டும். குகைப் பாதையோ 1,000 அடி நீளம் இருக்கும். அதற்குள் தண்டவாளம் சரியாக இருக்கிறதா, கற்கள் உள்ளே தளர்ந்து விழுந்தனவா என்பதைக் கவனிக்க வேண்டும். அப்படி ஏதாவது ஏற்படுமாயின், உடனே ஆட்களை வைத்து பழுது பார்ககவேண்டும். மேலதிகாரிகளுக்குச் செய்தி அனுப்பவேண்டும். இந்த வேலை வெகு பொறுப்பு வாய்ந்ததல்லவா. ஆகவே, பகற்காலம் வெகு சுலபமாகப் போய்விடும். இரவுகளில் தான், வீட்டு ஞாபகம் வரும். ஞாபகம் வரும்போது எல்லாம், எப்போது உத்தரவு வருமோ என்று ஆண்டவனைப் பிரார்த்திப்பான்.

குகைப் பாதைக்கு நேர் மேற் பாகத்தில் மலை உச்சியில் ஒரு அம்மன் கோயில் இருக்கிறது. அது ஒரு இயற்கைக் குகையில் அமைந்துள்ளது. அதன் மேல் ஒரு சிறு நீரருவி விழுகிறது. நீரோ வெகு தெளிவானதும் மிகவும் சுவை உள்ளது. கோயிலோ நிலையத்திலிருந்து சுமார் ஒரு கல் உயரத்தில் தான் இருக்கிறது. ஆகவே, சிவராம் அங்கு அடிக்கடி வேலையில்லாதபோது நீராடி அம்மனைத் தொழுது வருவதுண்டு. வெய்யிற் காலத்தில் அதிகமாகச் செல்வதுண்டு. அம்மன் வெகு சக்தியுள்ள தெய்வம். அருகில் உள்ள குடிகள் எல்லாம் அங்கே வழிபட செல்வதுண்டு. சிவராமும் தனக்கு வேறு இடத்திற்கு மாறுதலோ அல்லது உயர்ந்த வேலையோ கிடைக்க வேண்டும் என்று அடிக்கடி அம்மனை வேண்டிக் கொள்வான்.

அம்மன் கோயில் மகத்துவம்.

அம்மன் கோயிலுக்குப் போகிறவர்கள் பகல் வேளையில் தான் போவார்கள். கரடுமுரடான மலை ஏற வேண்டும். மலை ஏறுவதற்கு முந்தி, பள்ளத்தாக்கின் மீதுள்ள பாலத்தின் மீது நடக்க வேண்டும். அது இரவில் அபாயமானது. பாலத்தின்மீது செல்லாமல் போகவேண்டுமானால், பள்ளத்தாக்கின் கீழ் சென்று பின்னும் மேலே ஏற வேண்டும். அது வெகு கடினம். ஆகவே, எல்லாரும் பகல் வேளையில் தான் அம்மன் கோயிலுக்குச் செல்லுவார்கள். தவிர, குகை தோண்டும் காலத்தில் ஒரு பெரிய விபத்து நேரிட்டது. வெடி மருந்து வைத்துப் பாறைகளை எழுப்பினபோது, மருந்து வெடித்து 19 பேர் ஒட்டர்கள் இறந்து விட்டனர். அம்மனுடைய மலையை வெட்டினதினால் அம்மனுக்கு ஆவேசம் வந்து அக்கூலியாள்களை பலிவாங்கி விட்டாள் என்று அந்நாட்டு மக்கள் நம்பினார்கள். அந்த நம்பிக்கை இப்போதும் இருந்து வருகிறது. அவர்கள் உயிர் துறந்த நாள் வரும்போதெல்லாம் அவர்களுடைய பிசாசுகள் (பிரேத உடலங்கள்) அங்கே தோன்றி ஆடுகின்றன என்பார்கள். அந்த திதிகள் வருங்காலத்தில், சவங்கள் குகைவழிப் போவதே கிடையாது. நிலைய அதிகாரிகளும் அக்காலங்களில் அங்கு போவது இல்லை.

முனிராமின் எச்சரிக்கை

ஒரு நாள் சிவராம் தன் அறையில் உட்கார்ந்து கொண்டு வேலை செய்து கொண்டிருந்தான். முனிராம் என்ற ஒரு வேலையாள் அவனுக்கு எதிரே வந்து நின்றான். "என்ன செய்தி" என்று வந்த ஆளைக் கேட்டான். "சுவாமி, ஒட்டர்களின் திதி பக்கத்தில் வந்து விட்டது" என்றான்.

"என்னடா, ஒட்டன் திதி வந்தால் நமக்கென்ன"?

"அவர்கள் பிசாசு ஆகிவிட்டார்கள் என்று உங்களுக்குத் தெரியாதா? திதி நெருங்கிவிட்டால் அவர்கள் குகைப் பாதையில் இரவுகளில் கூத்தாடுவார்கள்".

"ஆடட்டுமே நமக் கென்ன".

"நேற்றிருந்தே அவர்கள் ஆடத் தொடங்கி விட்டார்கள். நேற்றிரவு ஆடின சப்தம் கேட்டதும், ஊரார்

(10-ம் பக்கம் பார்க்க)

இசை மூலமாக யுத்த முயற்சி

(மிஸ்டர் கே. எம். பாலசுப்ரமணியம், பி.ஏ., பி.எல்.)

ஒரு நாள் மாலை சுமார் நாலு மணியிருக்கும். கடைத் தெருவு வழியாகப் போய்க் கொண்டிருந்தேன். ஒரு கடைக்கு முன்னதாகப் பெரிய ஜனத்திரள் காணப் பட்டது. முட்டிக் கொண்டும் முரண்டிக் கொண்டும் பலர் கூட்டத்திற்குள் இடிபட்டுக் கொண்டு ஒரு கடையினுள் எட்டிப் பார்ப்பதையும் அதிகாரரிகள் கூட்டத்தை ஒழுங்குபடுத்தி வண்டிப் போக்கு வரத்துக்கு வழியமைத்துத் தருவதையும் கண்டேன். பின் அதற்குக் காரணம் என்னவென்று விசாரித்தேன். அங்கு நின்று கொண்டு கழுத்தை நெளித்துக் கொண்டிருந்த ஒருவர் 'இது தெல்லீங்களா, அவரு தான்....இவருங்க' என்று நீட்டினான். எவருங்கோ என்று எட்டிப் பார்த்தால் அங்கே அந்த கடைக்குள் பிரபல பாடகர் ஒருவர் சாமான் வாங்கிக் கொண்டிருந்தார். இவ்வளவு கலாட்டாவும் எதற்கு? எல்லாம் அந்த இசையின் வலிமை; கானத்தின் மகிமை. 'மூல பண்டாரம் வழங்குகின்றான் முந்துமின்னே' என்ற வண்ணம், இசையமுதை அள்ளியள்ளி எல்லோருக்கும் எளிதில் ஊட்டும் இசை வாணர்களுக்கு, எந்த நாட்டிலும் எல்லாக் காலங்களிலும் பெரு மதிப்பும் பேரும் புகழும் மக்களின் பிரியமும் பெருமிதமாகவுண்டு. இசை, கூட்டத்தைக் கவரும் இணையற்ற கருவி.

மக்களின் சாதாரணப் பேச்சுக்கு வேறுபட்டதாய், பண்புப் படுத்திப் பகுக்கப் பட்டுள்ள ஓசையோடியைந்து தாளம் முதலிய கட்டுப் பாட்டுடன் கூடியதாய், கேட்போர் உள்ளத்தைக் கவர்ந்து அவர்கள் கவனத்தை ஈர்த்துப் பிடிக்கக் கூடியதாய் இருப்பவைகட்கு, இசைப் பாட்டுக்கள் என்று பெயர். இசை என்பது தமிழ்; கானம் என்பது வட மொழி, இசையின் பெருமை எல்லையற்றதாகும். உயிருள்ள ஜீவ ராசிகள், உலக மக்கள், ஓங்கார சொரூபக் கடவுள் என்னும் உயர்திணை அஃறிணைப் பொருள்கள் எல்லாம், 'சர்வம் கான மயம்' என்ற வண்ணம் அமைந்துள்ளனவாம். இவ்விசையை 'எவ்வுயிரும் என்பூடு கரைந்துருக்கும் இன்னிசை' என்கிறார் சேக்கிழார் பெருமான். ஆனாய நாயனார் தனது புல்லாங்குழலை வாசித்த காலை, பல வகைப் பட்ட மிருகங்களும் அசைவற்று நின்று ஆனந்தம் அடைந்தனவாம். காடு, மலை, காட்டாறு, முதலியவைகளும் இசை வயப்பட்டு அசைவதை விட்டு நின்றன என்றால், இசையின் மகிமையைக் கேட்பானேன்? அந்த இசை,

'வையந் தன்னையும் நிறைத்து
வானந்தன் வயமாக்கிப்
பொய்யன்புக் கெட்டாத
பொற் பொதுவில் நடம்புரியும்
ஐயன்றன் திருச் செவியின்
அருகணையப் பெருகியதால்'

எனவே, கடவுளிடம் ஏதாவது நமது எண்ணங்களை வெளியிட வேண்டின், அந்த எண்ணக் கப்பல்களை இசை என்ற வெள்ளத்தின் அலைமீது விடுத்தால், அவைகள் இறைவன் செவி என்ற துறைமுகத்தில் சென்று நிற்கும். இறைவனிடம் எவ்வாறு நம் எண்ணத்தை எடுத்தேகிக் கொடுத்து நம் கருத்தை நிறைவேற்றி வைக்கின்றதோ, அதைப் போலத் தான் ஏனைய உயிர்களிடத்திலும் நம் எண்ணங்களைப் புகுத்தி 'எண்ணிய எண்ணியாங்கெய்தும்' வண்ணமே செய்கின்றது பண்ணெனும் இன்னிசை. இன்னிசை எல்லோர்க்கும் இன்பம் பயக்கின்றது. உயிருள்ளவையும் உயிரற்றவையும் கயிற்றிற் பிணைக்கப்படுவதைப் போல் செயலற்று இசையாற் சீக்கிரம் கட்டுப் பட்டு வசீகரிக்கப்பட்டு விடுகின்றன. இசை என்பது இருதயத்தின் பாஷை என்னலாம். இருதயம் என்பது உணர்ச்சிகட்கு இருப்பிடம். இங்கிருந்து உணர்ச்சிகள் ஊற்றெடுத்துப் புறப்பட்டு ஒவ்வொரு நரம்பிலும் ஓடி மக்களை ஊக்குவிக்கின்றனவல்லவா? உணர்ச்சிகள் ஒன்பது வகைப்படும். அவைகளை நவரசம் என்று கூறுவர். கோபம், பரிதாபம், இன்பம், வீரம் போன்ற ஒவ்வொரு உணர்ச்சியால் தான், ஒவ்வொரு மனிதனும் மற்ற ஜீவனும் கூடக் காரியங்களைச் செய்ய ஏதுவாகிறது. அத்தகைய உணர்ச்சிகளை மக்கள் உள்ளத்தில் நாம் விரும்பிய வண்ணமும் விரும்பிய போதும் கிளப்பி, அவர்களை நம் காரியத்துக்கு இணங்கச் செய்ய இசை ஒன்றினால் தான் முற்றிலும் முடியும்.

சாதாரணமாக, மனிதன் செய்து வரும் ஒவ்வொரு காரியத்திலும், இசை என்பதைச் சற்று கலந்து கொள்வானேயானால், அதன் மூலம் அவன் அடையும் வெற்றி அபரிமிதமாகின்றது. மிகக் கேவலமானதாகக் கருதப்படும் பிச்சைக்காரனை எடுத்துக் கொள்ளுவோம். 'சாமி, பிச்சைபோடுங்க, ஐயா, பசியாயிருக்குதே' என்று வீணாகக் கூவும் ஆசாமியைவிட, அதிக சீக்கிரத்திலும், சுலபமாகவும் பிச்சை வாங்கி விடுகின்றான் மற்றொருவன். ஏன்? அவன், 'நான் படும் பாடு சிவனே உலகர் நவிலும் பஞ்சு தான் படுமோ' என்று ஒரு ராகத்தில் பாடுகிறான். வெறும் வெல்லத்தையும் மாவையும் கூட்டிக் கலந்து பலவகைச் சாயத்தையும் கொட்டி, 'பம்பாய் மிட்டாய் பாரு, பல் பல் மிட்டாய் பாரு, ரொம்பத் தின்னாலே தென்பாயிருக்கும் பார்' என்று பாடி வரும் பாமர வியாபாரி, தனது சரக்கை வெகு சீக்கிரத்தில் தன்னைச் சூழ்ந்து வரும் பிள்ளைகளிடம் விற்றுத் தள்ளிவிட்டு வீடு திரும்புகிறான். ஒன்றுக்கும் பயன்படாத தேள் கடி மருந்தை விற்றுத் தள்ள ஆள் பிடிப்பதற்கும், தந்தனத்தான் என்று பாடும் ஒரு பாட்டுப் பயன்பட்டு விடுகிறது. மாலையில் பாட்டுக் கச்சேரி வைத்திருக்கும் கலியாண வீட்டு கூட்டமே ஒரு தினுசு தான். மதங்களும் இசை என்ற அஸ்திவாரத்தின் மீது தான் கட்டப்பட்டுள்ளன. பாதிரிகளுக்கு இசைப் பயிற்சி அவசியம் என்கிறார் மார்டின் லூதர். ஞான சம்பந்தரும், சுந்தரரும், ஆழ்வாராதிகளும் அடியவர்களும் பாட்டின் மூலம் தான் தத்தம் மதத்தைப் பரப்பி கூட்டம் கூட்டமாய் மக்களைச் சேர்த்தனர்.

பழங்கால யுத்தங்கள் இருதரப்பட்ட எதிரிகளின் சேனா வீரர்களை மட்டும் பாதிப்பனவாய் இருந்து வந்தன. பொது ஜனங்களைப் பொறுத்தமட்டில், அது வேறு எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. எனவே இசையும் பாட்டும் அக்கால யுத்தத்தில் இன்றியமையாதனவாய் இல்லை. 'செருப்பறை கேட்டு விருப்புற்று முயங்கி' என்ற புறநானூற்றின் வாக்கியப்படி, அரசனது பணியாட்கள் அறையும் முரசொலி கேட்டு நாட்டிலுள்ள வீரர்கள் தத்தம் ஆயுதங்களுடன் போர்க்களம் போந்தனர். ஐரோப்பாவிலே 'க்ரூசேட்ஸ்' என்னும் மதச் சண்டைகளுக்கும் இத்தகைய போர் இசையொலி கேட்டே, பெருவாரியான மக்கள் போந்தனர்.

ஆனால், தற்போதைய யுத்தம் சகலவித மக்களையும் சரிசமமாய்ப் பாதிக்கும் சண்டை. இதில் போர் வீரன் என்றும் போருக்குப் போகாதவன் என்றும் செய்யப்படும் வேறுபாடு பேரளவினதே. ஒவ்வொரு நாட்டிலும் உள்ள ஆண், பெண், குழந்தை உட்பட அத்தனைப் பேரும், ஒத்துழைத்துத் தத்தம் பங்கு வேலையைப் பாங்குடன் செய்யாவிடில், அந்நாடு இந்த யுத்தத்தில் வெற்றி பெற முடியாது. அதனால் தான், இதற்குப் பூரண யுத்தம் என்று பெயர். நாலா விதத்திலும் நம் மக்கள் நன்கு ஒத்துழைக்க வேண்டும். மனப்பூர்வமாகச் செய்ய முன் வரவேண்டும். வெறும் சட்ட திட்டங்களாலும் கட்டாய முறைகளாலும் இவற்றைச் சாதித்தல் முடியாது. மக்களது மனம் மாறி, மனப் பூர்வமாக ஆர்வத்துடன் செய்ய அவர்கள் முன் வர வேண்டும். அதற்குப் பிரசாரம் தேவை. வெறும் வார்த்தைப் பிரசாரம் மட்டும் வெகுவாகப் பயன்தரமாட்டாது. பொது மக்கள் இதயத்தைத் தாக்கினால் தான், அவர்களது உணர்ச்சியைப் பெருக்கெடுக்கச் செய்ய முடியும். அவ்வித உணர்ச்சிப் பெருக்கு ஏற்பட்டால் தான், அவர்கள் மனமுவந்து முன் வருவார்கள். வந்து ஆவன செய்யவும் ஆகாதன விலக்கவும் ஒத்துழைப்பார்கள். முதன் முதலாக, யுத்தப் பிரசாரக் கூட்டம் கூட்டினால், அதில் ஆட்கள் வந்து சேருவதற்கே இசை இன்றியமையாத தாகின்றது. முதலிலும், இடையிலும் முடிவிலும் இசையைப் பிரயோகித்துக் கொண்டு ஒரு

(9-ம் பக்கம் பார்க்க)

குள்ளனின் வாலாட்டம்

வீட்டிலே உள்ள சில நாய்க் குட்டியின் நடத்தையைக் கவனித்திருக்கிறீர்களா? அதை நாலு தடவை சேர்ந்தாப் போல் அடித்து விட்டால், அதற்குப் பிரமாதமாகக் கோபம் வந்து விடும். ளொள், வள் என்று குலைத்துக் கொண்டு அங்கு மிங்கும் ஓடும். சில சமயங்களில் சீறிக் கொண்டு, நம் மேலேயே விழும். இன்னும் சில சமயங்களில் நமது வேஷ்டியையே அது கிழித்து விடுவதும் உண்டு. அவ்வாறு அது வேஷ்டியைக் கிழிக்கும் போது, நமது கால் மேலே அதனுடைய நகமோ, பல்லோ படக் கூடும். ஆனால், அந்த நாய்க் குட்டியைக் கண்டு நாம் பயப்படவேண்டுமா என்ன? ஒரு பிரம்பை எடுத்துக் கொண்டு, இரண்டு பலமாக வைத்தால் போதும்; இல்லா விட்டால், ஒரு சொம்பு ஜலத்தை எடுத்து, அதன் தலையில் கொட்டி விட்டாலே போதும்! தூர ஓடிப் போய் விடுமே அது.

அதே போலத் தான் ஜப்பானியர்கள் இந்தியா பர்மா எல்லை அருகே, கொஞ்சம் வாலாட்டத் துணிந்திருக்கிறார்கள். அஸ்ஸாம் மாகாணத்தைச் சேர்ந்த மணிப்புரி சமஸ்தானத்திற்குள்ளே அவர்கள் புகுந்திருக்கிறார்கள். சிறிது தூரம் முன்னேறியும் வந்திருக்கிறார்கள். சென்ற திங்கட்கிழமை வந்த செய்திகளிலிருந்து, மணிப்புரி சமஸ்தானத்தின் தலை நகரும், மணிப்புரி, இம்பால் என்ற இரு பெயர்கள் கொண்டதுமான இடத்தை ஜப்பானியப் படைகள் தாக்கத் தொடங்கி யிருக்கின்றன என்று தெரிகிறது. அவ்வூராரில் பெரும் பாலோர் வெளியேறி விட்டார்களாம். ஆனால், 'இம்பாலை விட்டு நான் போகமாட்டேன்' என்று இம்பாலின் இளமன்னர் கூறி யிருக்கிறார்.

ஜப்பானியப் படைகள் இம்பாலுக்கு வரும் நல்ல ரஸ்தாக்களைச் சில இடங்களில் துண்டித்து விட்டனவாம். டிட்டிம், டாமு என்ற பிரதேசங்களிலும் போர் நடக்கின்றதாம். இம்பாலிலிருந்து வடக்கே முப்பது மைல் தூரத்தில், கோஹிமாவிற்குச் செல்லும் 'பஸ்ட் கிளாஸ்' ரஸ்தாவை, ஒரு ஜப்பானியப் படை துண்டித்ததாம். கோஹிமா, இம்பால் இந்த இரண்டு இடங்களும் 14-வது இந்தியப் படையின் முக்யமான தளங்களாக உள்ளன. ஜப்பானிய ரது ஆர்ப்பாட்டம் இம்பாலுக்கு வடக்கே தான் அதிகமாக இருக்கிறதாம்.

விஷயந் தெரியாதவர்கள் நினைவு

இதை யெல்லாம் கேட்டு விட்டு, 'இந்தியாவிற்கு ஆபத்து வந்து விட்டது போலிருக்கே!' என்று விஷயந் தெரியாதவர்கள் சிலர் நினைக்கலாம். விஷயந் தெரிந்தவர்களிடை கூட, சிலருக்கு ஒரு மாதிரியாக இருக்கலாம்.

ஆனால், ஜப்பானியர் செய்யும் இந்த கலாட்டாவை எண்ணி, யாரும் கலங்கவே தேவையில்லை. இம்மாதிரி வரக் கூடிய ஜப்பானியப் படைகளுக்குச் சரியானபடி பூசைக் காப்பளிக்க, வேண்டிய 'பூசாரி'களை நேச தேசத்தார் வைத்திருக்கிறார்கள். பேயை ஓட்டி, ஆளைச் சரிப்படுத்த பூசாரி வேப்பிலையைத் தலைமேலே அடிப்பது போல், ஜப்பானியருக்குப் பிடித்திருக்கும் படை யெடுப்புப் பித்து எனும் பிசாசை, நேச தேச விமானிகள் தலையிலடித்து விரட்டச் சித்தமாக இருக்கிறார்கள்.

இப்படி ஊரிலே கொஞ்சம் பேர்களுக்கு கலக்கம் ஏற்பட்டிருக்கலாம் என்பதை உத்தேசித்தே தான், சேனாபதி துரை, டில்லி சட்ட சபைக் கூட்டத்தில் ஆஜராகி, முதல் தடவையாக, பர்மா போரைப்பற்றி விவரமாகப் பேசி யிருக்கிறார்.

'ஜப்பான்காரன் எங்கே தலையை நீட்டினாலும் அதை உடனே தடுத்து விடுவது என்பது அசாத்தியம். ஆகவே, சில இடங்களில் அவனுடைய உபத்திரவத்தால் கொஞ்சம் சிரமம் ஏற்படலாம். ஆனால், இதனால் எல்லாம் அஸ்ஸாமிற்கு ஆபத்து என்று சிறிதும் எண்ணவே வேண்டாம். அஸ்ஸாமிற்கு ஒரு ஆபத்தில்லை' என்று சொல்லி யிருக்கிறார் அவர்.

சேனாபதிக்கு அக்கரை யில்லையா?

இந்திய சேனாபதி என்றுள்ள ஒருவருக்கு, இந்திய மண்ணைப் பாது காக்கும் விஷயத்தில் அக்கரை இராதா என்ன? அவர் இப்பொழுது ஹைதராபாத், தென்னிந்தியா ஆகிய பிரதேசங்களில் உள்ள படைகளைப் பார்வை யிட்டிருக்கிறார்.

ஜப்பானியன் கிழக் கெல்லையில் மூக்கை உள்ளே நீட்டி யிருக்கிறான்; அப்படியிருந்தும் சேனாதிபதி தென்னிந்தியாவிற்கு வந்திருக்கிறார் என்பதிலிருந்தே, ஜப்பானியனின் படை யெடுப்பு ஒன்றும் பிரமாதமான விஷயமில்லை என்று தெரியவில்லையா?

'சில ஜப்பானியர் திருட்டுத் தனமாக இந்தியாவிற்குள் சில இடங்களில் புகுந்திருப்பதைக் கண்டு கலங்க வேண்டாம். கலங்கக் காரணமே இல்லை. ஏதோ வந்தார்கள். பூசை வாங்கிக் கொண்டு போவார்கள். அவர்களைப் பற்றி நாம் கவலைப்படவே தேவையில்லை' என்று கூறி யிருக்கிறார் அஸ்ஸாமியப் பிரதம மந்திரி ஸர் முகமது ஸாதுல்லாவும்.

இவர்கள் எல்லாம் பொறுப்பறிந்து பேசுபவர்கள் அல்லவா? ஆகவே, இவர்கள் வார்த்தைகளைக் குறித்துச் சந்தேகிக்கவே இடமில்லையே!

குள்ளர்களின் கொம்மாளம்

சீக்கிரமே மழை காலம் வரப்போகிறது. மலையாளத்திலே மூச்சு விடாமல் நொறுக்கித் தள்ளுமே ஒரு மழை, அதே மழை தான் நேரே இந்த அஸ்ஸாம் மலைகளில் போய் அடித்து வாங்கும். அதற்குள்ளாக, இந்த கோஹிம்-இம்பால் ரஸ்தாவைக் கைப் பற்றிக் கொண்டு, இம்பால் நகரைப் பிடித்து வைத்துக் கொண்டு, சௌகரியம் போல், கங்கை, பிரமபுத்திரா நதிகளில் செல்லும் ராணுவப் படகுகளையும், புகைக் கப்பல்களையும் வங்காளம், அஸ்ஸாம் ஆகிய மாகாணங்களில் உள்ள விமானக் கூடங்களையும், ரயில் போக்குவரத்து மார்க்கங்களையும் தகர்க்கலாம் என்று குள்ளர்கள் சொப்பனம் கண்டு கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது.

அவர்களிடம் விமானங்கள் அதிகமில்லை. ஆனால் நம்மிடமோ ஏராளமானவை இருக்கின்றன. அநு தினமும் நமது விமானங்கள் பர்மா மீது எங்கெங்கோ பறந்து சென்று, எதிரிகளின் படைகள் நிறைந்துள்ள இடங்களையும், எதிரிக்கு ராணுவ முக்யம் வாய்ந்ததாகத் தோன்றும் இலக்குகளையும் பொசுக்கித் தள்ளி விட்டு வருகின்றன. பல சமயங்களில் எதிர்ப்பு என்பதே எள்ளளவும் இல்லாது, நமது விமானிகள், ராஜாக்கள் மாதிரி 'ஜம்' என்று போய்த் திரும்பி யிருக்கிறார்கள். கருடனைக் கண்ட பாம்புகள் மாதிரி, ஜப்பானிய விமானங்கள் பதுங்கி விடுகிறாப்போ லிருக்கிறது. இப்படிப் பட்ட அழகான பாது காப்போடு, குள்ளர்கள் இந்தியா மீது படையெடுக்கத் துணிந்திருக்கிறார்கள்! வேண்டுமானால், எறும்பு ஒரு சர்க்கரைப் பொடியைத் தலையில் தூக்கிக் கொண்டு போகும். அதுவே ஒரு தேங்காயைத் தூக்கத் தான் முடியுமா? தேங்காய்க்குப் போவானேன்! பெரிய கடுகைத் தூக்க முடியுமா?

அசல் அசடுகள்!

அதுவே போல, ஏதோ ஆசையால், ஜப்பானியர் ஏழெட்டுப் பத்து மைல்கள் முன்னேறி வரலாம், ஆனால், இந்தியா முழுவதையும் அவர்கள் பிடிக்க வேண்டும் என்று எண்ணி யிருந்தால், அவர்களைத் தான் 'அசல் அசடுகள்' என்று கூறவேண்டும்.

சே! ஜப்பானியர்களை அவ்வளவு மோசமாகக் கூறிவிட முடிகிறதா என்ன? அவர்கள் அசடுகள் அல்ல். ஏதோ தெரியாத் தனத்தால் இப்படி ஏதோ செய்து விட்டார்கள். எங்கும் அகலக் கால்கள் வைத்து விட்டார்கள். வைத்த காலை, தானாக மடக்க மனம் வரவில்லை. ஆகவே, ஆங்காங்கே உதை வாங்கிக் கொள்ளுகிறார்கள். இந்திய மண்ணில் கால் வைத்தது கூட ரொம்பப் பிசகு என்பதை அவர்கள் சீக்கிரமே உணரப் போகிறார்கள் என்பது திண்ணம்.

இப்பொழுதே இம்பால் அருகே உள்ள சம வெளியிலே ஜப்பானியர் மெள்ளத் தலையை நீட்டிப் பார்த்தார்களே! உடனே என்ன நடந்தது? வெள்ளைக் கடுதாசி மீது பேன்களை எடுத்துப் போட்டால், பேன்கள் இருக்குமிடத்தைக் கண்டு பிடிப்பது சிரமமா என்ன? அது போல், சம வெளியில் வந்திறங்கிய ஜப்பானியர்களைக் கண்டதும், நேச தேச விமானங்கள் வெகு உத்சாகத்தோடு நொறுக்கத் தொடங்கி விட்டன.

பார்த்தார்கள் ஜப்பானியர்கள்! "அம்மாடோய்! ரொம்பச் சுடுகிறதே இங்கே!"

(11-ம் பக்கம் பார்க்க)

யுத்தமும் பெண்கள் தொண்டும்

காயம்பட்டவர்களுக்கும் நோயாளிகளுக்கும் கருணைமிக்க பராமரிப்பு

ஆண்களைப்போல் பெண்களுக்கும் கடும் உழைப்பு

(ஸ்ரீமதி பார்வதி மணியம்)

யுத்த கைதிகளாயிருக்கும் இந்தியர்களுக்கு அனுப்பும் பொருட்டு, லண்டனில் உள்ள இந்தியப் பெண்கள் கட்டியுள்ள பார்சல்களை, மாட்சிமை தங்கிய அரசியார் பார்வை யிட்டார்கள்.

முன் காலத்தில் யுத்த மென்றால், போர் முனையில், போர்வீரர்கள் தான் யுத்தம் செய்வார்கள். நாட்டு ஜனங்கள், யுத்தத்தில் எந்தக் கக்ஷியார் ஜெயிப்பார்கள் என்று, ஆலோசனை செய்து கொண்டும், பலவாறாக ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டும் இருப்பார்கள். ஆனால், தற்கால யுத்தம், எல்லோருடைய வீட்டு வாசலிலும் வந்து நிற்கிறது. வீட்டிற்குள்ளிருக்கும் ஸ்திரீ, குழந்தைகள் உள்பட, இதிலிருந்து தப்ப முடியாது. அதனால், இப்பொழுது நடந்து வரும் யுத்தத்திற்கு, பழைய கால யுத்தத்தைப் போலல்லாமல், அனேக போர் முனைகளுண்டு. ஆகவே, இந்த யுத்தத்தில், ஆண், பெண், குழந்தைகள் அனைவருக்கும் வேலை இருக்கிறது. அதில், முக்கியமாக ஸ்திரீகள் என்னென்ன செய்கிறார்கள் என்பதைக் கவனிப்போம்.

பிற நாடுகளில் பெண்கள் முயற்சி.

ரஷ்யா, சீனா, அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளிலுள்ள ஸ்திரீகள், இப்பொழுது நடக்கும் யுத்தத்தில் கடுமையான வேலைகளைச் செய்து வருகிறார்கள். வேலை செய்து பழக்க மில்லாத பலரும், டைப்பிஸ்டுகளாக இருந்த சிலரும், தியேட்டர்களில், கோரஸ் பாடிக்கொண்டிருந்த மற்றுஞ் சிலரும், தங்களது சந்தோஷமும் சுலபமுமான தொழில்களை மறந்து, கஷ்டமான பல தொழில்களில், ஈடுபட்டிருக்கிறார்கள். 20 வயதிற்கு மேல்பட்டு, 45 வயது வரையிலுமுள்ள ஆயிரக் கணக்கான ஸ்திரீகள் தம் தேசத்தின் நலனுக்காக, இரவும் பகலும், அரும்பாடு படுகிறார்கள்.

ஒவ்வொரு தொழிலுக்கும் ஒவ்வொரு சங்கம்.

பலர் ஒன்று சேர்ந்து, அனேகம் சங்கங்களாக ஏற்படுத்திக் கொண்டு, ஒவ்வொரு சங்கமும் ஒவ்வொரு தொழிலை நடத்தி வருகிறது. அதில் ஒரு சங்கத்தார், சாகுபடியைப் பற்றி முன்பின் தெரியாதவர்கள். அனேகம் எக்கர் கட்டாந்தரையை உழுது, சீர்ப்படுத்தி, கோதுமை பயிர் இட்டிருக்கிறார்கள். பூந் தோட்டமா யிருந்த பல இடங்களை, காய்கறித் தோட்டமாக மாற்றி இருக்கிறார்கள்.

ஆஸ்பத்திரியில் அனேகர் நர்சுகளாகவும் சேர்ந்திருக்கிறார்கள். கடும் நோயால் வருந்தும் பல சிப்பாய்களுக்கும் குண்டு பட்டு கை கால் ஒடிந்த பலருக்கும், மிகப் பரிவுடன் சிகிச்சை செய்கிறார்கள். இத்துறையில் படித்து பழக்க மில்லாதவர்களும், மற்றவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு, தன்னால் இயன்ற உதவியைச் செய்கிறார்கள்.

வெடிகுண்டு வீச்சிலும் தொண்டு

விமானப் படை யெடுப்பினால், நகரங்கள் சேத மடைந்தால், அதைச் சீர் திருத்துவதும், குண்டு வீச்சினால் ஏற்படும் தீயை அணைப்பதும், வெடிக்காமலிருக்கும் குண்டை அணைப்பதும், ஸ்திரீ சங்கத்தார்தான். இச்சங்கத்தார் இவ்வேலையை எவ்விடத்திலிருந்தாலும், எந்த வேலையிலானாலும், சரிவரச் செய்கிறார்கள்.

விமானம், டாங்கு, துப்பாக்கி முதலியவை செய்யும் தொழிற்சாலைகளிலும் இயந்திர சாலைகளிலும், ரயில்வேயிலும் புருஷர்கள் செய்து வந்த வேலைகளை, தற்சமயம், ஸ்திரீகள் தான் செய்கிறார்கள். தவிர, மோட்டார்கார், ட்ராம், பஸ், லாரிகள் ஓட்டுகிறதும் ஸ்திரீகள் தான். அவர்களை யுத்த வேலையில் ஈடுபடும்படி, ஒருவரும் நிர்ப்பந்திக்க வில்லை. மேற் கூறிய பல கடின வேலைகளை, தாமாகவே முன் வந்து, தைரியத்துடன் செய்து வருகிறார்கள்.

ரத்த பாங்கிக்குப் பெண்கள் உதவி

இதல்லாமல் வெட்டுண்டு, பிரவாஹம் போல் தேகத்திலிருக்கும் ரத்தம் போய், மரணத் தருவாயிலிருக்கும் சிப்பாய்களுக்கு, தங்கள் ரத்தத்தைக் கொடுத்து, பேராபத்தி னின்றும் அவர்களை ரக்ஷிக்கிறார்கள்.

ரஷ்யாவில் விமானப் படையிலும், போர் முனையிலும், புருஷர்களுக்கு உதவியாக, சில ஸ்திரீகள் விமான எதிர்ப்புப் பீரங்கிகள், ம்ஷின் பீரங்கிகள் இவைகளைக் கையாளுகிறார்கள். விமானங்கள், டாங்கிகள் ஆகியவற்றையும் ஓட்டுகிறார்கள். இவைகளை யெல்லாம் கையாளுவதற்கு, வெறும் பலம் மட்டும் இருந்தால் போதாது. நல்ல மூளை வேண்டும். பலவான் தான் போர்வீரன் என்பதில்லை. தைரியம், மன உறுதி, உத்ஸாஹம் இவை தான் மிகவும் அவசியம். ரஷ்யா, சீனா, அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளிலுள்ள லக்ஷக் கணக்கான ஸ்திரீ சங்கங்கள் ஒன்று கூடி அரும்பாடுபடுவது எதற்கென்றால், அவர்கள் குழந்தைகள், புருஷன்மார்கள், தேசம் இவைகளின்



செஞ்சிலுவை செண்ட் ஜான் சென்னையில் நடத்திய காட்சி சாலை.

நலனிற்காகவே தவிர, மற்றொன்று மில்லை. வெளியில் சென்று, யுத்த வேலை செய்ய முடியாத சில ஸ்திரீகள், வீட்டிலிருந்தபடியே, சிப்பாய்களுக்கு வேண்டிய மேல் ஜோடு, பனியன்கள், கம்பளி சொக்காய் முதலியவைகளைத் தயாரிக்கிறார்கள்.

சீனப் பெண்களின் போர் வீரம்

சமீப காலம் வரை, மிகவும் புராதன வழியைப் பின்பற்றி யிருந்த சைனா தேசத்தில், ஸ்ரீமதி சியாங்கை ஷேக், முதலிய தலைவிகளின் முயற்சியினாலும், தேசம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தினாலும், காலை சிறிய ஜோட்டில் கட்டி வைத்திருந்த ஸ்திரீகள் கூட, போர் முனையில் நின்று, போர் வீரர்களாக யுத்தம் செய்கிறார்கள். ஆகையால், ஸ்திரீகள் யுத்தத்தில் இன்ன வேலை தான் செய்ய வேண்டும், இன்ன வேலை தான் செய்ய முடியும் என்று சொல்வது, மிகவும் தவறு. பெரும்பாலும் யுத்த களத்தில் ஆண் மக்கள் தான் போர் புரிகிறார்கள்.

நம் பெண்களின் முற்போக்கு

நம் நாட்டு ஸ்திரீகளும், காலம் போகப் போக முன்னேறிக்கொண்டு தான் வருகிறார்கள். வீட்டு வேலையை தவிர, வெளி விவகாரங்கள் ஒன்றும் தெரியாமலிருந்தவர்கள், இப்பொழுது எல்லாத் துறைகளிலும் படித்துத் தேர்ச்சி யடைந்து, பலர் உத்தியோகமும் வகிக்கிறார்கள். டாக்டர், வக்கீல், நரசு இன்னும் பல துறைகளிலும், இப்பொழுது ஸ்திரீகளைக் காணலாம். ஸ்திரீகளுக்குக் கல்வியினால் அனேகம் நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. இப்பொழுது இந்த யுத்தத்தில், வீண் காலம் கழிக்காமல், தம்மால் முடிந்த உதவியைச் செய்ய, சக்தியுடையவர்களாக இருக்கிறார்கள்.

இந்தியப் பெண்கள் உதவிப் படை

இந்தியாவில் கவர்ன்மெண்டார் 1942-வது வருஷம், ஓர் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தார். அது என்னவென்றால் (W.A.C.) அதாவது, ஸ்திரீகள் உதவிப் படை. இதில் திடகாத்திரமுள்ள 17 வயதுக்கு மேற்பட்டவர்கள், தேசப் பாதுகாப்பிற்காக யுத்த சம்பந்தப்பட்ட பல வேலைகளை, வெகு உற்சாகத்துடன் செய்து வருகிறார்கள். இந்தப் பட்டாளம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகிறதே தவிர, ஒரு விதத்திலும் குறைய வில்லை. இப்பட்டாளத்தின் எண் அதிகரிக்க, அதிகரிக்க, ஆண்பாலர் வெளி நாடுகளுககுச் சென்று போர் புரிய சௌகரியமா யிருக்கும்.

இந்தியாவின் எல்லைகளைச் சுற்றி, நம் ஆண் மக்கள் துப்பாக்கி ஏந்திய கைகளுடன், ஒரு பெரிய கோட்டை மதில் போல் இருந்து, நம்மையும், நம் தேசத்தையும் காப்பாற்றுகிறார்கள். அதனுடைய உட்சுவர், நம்முடைய உதவி பட்டாள ஸ்திரீகள் தான்.

ஆண்கள் கடும் உழைப்பு பெண்களுக்கும்

இந்த யுத்தத்தினால், எவ்வளவோ கெடுதிகள் இருந்த போதிலும், ஸ்திரீகளுக்குச் சில நன்மைகளும் இருக்கின்றன. அதாவது, ஸ்திரீகளும், புருஷர்கள் செய்யும் எல்லா வேலைகளையும் செய்வது சாத்தியம் என்று தெளிவாகத் தெரிகிறது. ஸ்திரீகள் முன்னேற்றத்திற்கு, முட்டுக்கட்டையான பல வழக்கங்களும், ஸ்திரீகள் வீட்டில் தான் இருக்க வேண்டும் என்னும் காலமும் மறைந்து வருகின்றன. சாதாரண நாட்களில், 50 வருஷங்களில் நடக்கக் கூடிய ஸ்திரீகள் முன்னேற்றம், தற்பொழுது யுத்தத்தினால், நான்கு வருஷங்களில் நடைபெற்று வருகிறது.

நம் நாட்டு ஸ்திரீகள் இன்னும், மேலும் மேலும் யுத்த முயற்சிகளில் ஈடுபட்டு, நம் ஆடவர்களைப் போரில் முக்கியமான வேலைகளைச் செய்யும்படி தூண்டுவது, ஒவ்வொருவரின் கடமையாகும்.

—சென்னை அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து மார்ச்சு மாதம் 28-ம் தேதி ஒலிபரப்பப்பட்ட பிரசங்கம்.

சீன மக்களின் சிறந்த கொடை

விசாகப்பட்டணம் கஷ்ட நிவாரணத்திற்கு ரூ. 20,000

சீன மக்கள் இம்மாகாணத்தி லுள்ளவர்களின் துயரைப் போக்க வேண்டி மிகத் தாராளமாகக் கொடுத் துதவிய ரூ. 20,000-யும் சமீபத்தில் விசாகப் பட்டினத்தில் ஏற்பட்ட கடும் புயலினால் துன்பத்திற்கு உள்ளானவர்களுக்கும், பர்மாவிலிருந்து எதிரிகள் கைகளுக்குத் தப்பி வந்து சேர்ந்தவர்களின் உதவிக்காகவும் செலவிட வேண்டுமென்று மேன்மை தங்கிய கவர்னரவர்கள் கட்டளை யிட்டிருக்கிறார்கள்.

கீழ்க் கண்ட முறையில் இத்தொகை விநியோகிக்கப்படும் :—

சிக்காகோல் தாலூகா.—மலிவுத் துணி இலவசமாக வழங்குவதற்கும், மலேரியா காய்ச்சல் பரவியுள்ள கடற்கரைக் கிராமங்களில் இலவசமாக அரிசி விநியோகிக்கவும் ரூ. 10,000.

சீபுரன்பள்ளி தாலூகா.—மலிவுத் துணி இலவசமாக வழங்க ரூ. 4,000.

பர்மாவிலிருந்து எதிரிகள் கைக்குத் தப்பி விசாகப்பட்டினம் வந்து சேர்ந்துள்ள தொழிலாளர்கள் விடுதிக்கு.—மக்கள் களிப்படையத் தக்கவை செய்வதற்கும், மலிவுத் துணி இலவசமாக விநியோகிப்பதற்கும் ரூ. 6,000.

பர்மாவில் இந்திய விமானப் படை

"இராணுவத்தின் கண்கள்"

('யுத்த' சஞ்சிகைக்குப் பிரத்தியேகமாக எழுதப்பட்டதின் மொழி பெயர்ப்பு)

பர்மியப் போர்முனையிலுள்ள இந்திய விமானப் படையைச் சேர்ந்த விமான மோட்டிகளை, சென்ற சிலமாதங் களாகவே அடிக்கடி 'இராணுவத்தின் கண்கள்' என்று அழைக்கிறார்கள்.

பர்மியப் போர் முனையிலுள்ள பொது மக்களோடு உறவாடும் இந்தியப் படையைச் சேர்ந்ததோர் உத்தியோகஸ்தர் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார் :—

"வட்டமிட்டுப் பார்க்கும் விமான உத்தியோகஸ்தரான எம். ராமுண்ணியை, 'இராணுவத்தின் கண்கள்' என்பதற்கு என்ன அர்த்தம் என்று கேட்டேன்.

ராமுண்ணி :—ஒவ்வொரு நாள் காலையிலும் படையின் தலைமைக் காரியாலயத்திலிருந்து விமான லியைஸான் ஆபீசருக்கு ஒரு கட்டளை வரும். அன்று தினம் அவரைப் பார்க்க விரும்புவதாகப் படைத் தலைவர் அதில் தெரிவித்திருப்பார். அவரை அப்போது சந்திக்கும்போது, நமது முன்னணிக்கு அப்பால் கொஞ்ச தூரத்தில் எதிரிகள் தங்கி யிருக்கிறார்க ளென்றோ, அல்லது அவர்கள் காடுகள் வழியாகப் போய்க் கொண்டிருக்கிறார்க ளென்றோ, அல்லது வளைந்து வளைந்து செல்லும் ஆறுகளின் வழியாகச் செல்லலாமென்றோ அவர் கூறக் கூடும்.

"தந்திரமாக எதிரிகள் பதுங்கி யிருக்கும் இடங்களை விமான மோட்டிகள் கண்டு பிடிக்க வேண்டும். அல்லது நமது வெடிகுண்டு விமானங்களும் போர் விமானங்களும் எந்தெந்த குறிப்பான இடங்களைத் தாக்கவேண்டுமென்று போய்ப் பார்த்து வந்து சொல்ல வேண்டும். அல்லது, அதற்கு முன் தினம் நம் வெடிகுண்டு விமானங்களும் போர் விமானங்களும் தாக்கியதன் பயனாக எதிரிக்கு எவ்வளவு சேதம் ஏற்பட்டது என்று திட்டமிடவேண்டும். இவை யெல்லாம் விமானியின் வேலை. படமெடுக்கும் கருவிகள் நம் விமானங்களி லெல்லாம் இருக்கின்றன. அதை விமானிகள் போட்டோ படமெடுப்பதில் தகுந்த தேர்ச்சியுள்ளவர்கள். ஆகவே, தாம் விமானத்திலிருந்து கண்ணால் பார்ப்பதை இந்தப் படத்தில் பார்த்து தணிக்கை செய்து கொள்ளலாம்.

"நாம் செய்யும் வேலை பிறர் எளிதில் தெரிந்து கொள்ள முடியாதது. எதிரி விமானங்களை நாம் சுட்டு வீழ்த்த வேண்டுமென்று நம்மை யாரும் எதிர் பார்த்திருப்பதில்லை. தரைக்கு வெகு தூரத்திற்கு மேலே நாம் போவதில்லை; ஆனால், மர உச்சிகளுக்கு மேலேயும், மலைகளுக்கு இடையி லுள்ள பள்ளத் தாக்குகளிலும் தான், நாம் பறக்கிறோம். இந்த வேலைக்கு மிகுந்த பொறுமையும், சீர்தூக்கிப் பார்க்கும் திறமையும், ஓரளவிற்குத் தைரியமும் இருக்கவேண்டும்.

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

சாதாரணப் பேச்சாளி தன் பிரசாரத்தைச் செய்வானேயானால், அவன் கூட்டத்திற்கு வந்து அவன் பேச்சில் ஈடுபடும் ஜனங்களின் எண்ணிக்கை, அவ்வாறு இசையும் பாட்டும் இல்லாத வேறொரு மிகச் சமர்த்தான பிரசங்கியிடம் வயப்படும் மக்களின் எண்ணிக்கையைக் காட்டிலும் பெரியதாக இருப்பது பலரும் கண்ட உண்மை யனுபவமே. இந்த மகா யுத்தத்தில் ஒவ்வொரு இந்தியனும் சேருவது அவசியம் என்று ஒரு மணி, தொண்டை வறளக் கத்துவதைக் காட்டிலும் :—

'இந்திய நாட்டினில் உய்ந்திடும் வீரர்கள்
முந்திய தந்தையர் வன்திறம் முந்துறச்
சேர்ந்திடுவாய் போரில்— தமிழா
சேர்ந்திடுவாய் போரில்.'

என்று ஒரு முறை பாடினால் அதன் கவர்ச்சியும் பலனும் வேறே தான். நமது எதிரிகளின் கோரமான தன்மையையும் ஜப்பான்காரனது மூர்க்கத் தனத்தையும் எவ்வளவு தான் வெறும் வார்த்தைகளால் வர்ணித்துப் பாருங்கள். ஆனால்

கொடுமைக்காரனடி—ஜப்பான்—
கொடுமைக்காரனடி
குள்ளன்—கொடுமைக்காரனடி

அநுபல்லவி.

கொள்ளையடித்தே மகிழும்
குள்ளனுமடி—இளங்
கோதையரைக் கற்பழிக்கும்
கள்ளனுமடி (கொடுமை)

என்று கொஞ்சம் பாடினால் இதனுடைய பலனும் கவர்ச்சியுமே ஒரு அலாதி தான். ஒருவன் பேசிக்கொண்டே போய் திடீரென்று இடையில்,

'சொல்லு பாப்பா சொல்லு
பாப்பா—உண்ணும்
சோற்றுச் சிக்கனமுறை
சொல்லுபாப்பா (சொல்லு)

என்றால் சபையில் உள்ள மக்கள் முகம் மலர்வதையும், மனம் வயப்படுவதையும் கவனம் கவரப்படுதலையும் நாம் கண் கூடாகக் காணலாம். கொள்ளை லாபம் அடிக்கும் வியாபாரிகளை மணிக் கணக்கில் வசனத்தில் கண்டித்துப் பாருங்கள். ஆனால் அதன் பயனைக் காட்டிலும்,

கடையிற் சரக்குகளைச் சேர்த்து வைப்
போர்—ஐந்தாம்
படையிற் சிறக்கும் படுபாவிகளே (கடை)

என்று பாடுவதால் ஏற்படும் பலன், எவ்வளவு உயர்வானது என்று யோசியுங்கள். இப்பாட்டின் வார்த்தைகள் மக்களின் உள்ளத்தில் ஊடுருவிச் சென்று உணர்ச்சியையும் உத்வேகத்தையும் கிளப்புகின்றதைக் காணலாம். இதே மாதிரிதான் எல்லாவிதப் பிரசாரங்களுக்கும் இசையும் பாட்டும் பயன் தருகின்றன. இதை உத்தேசித்துத் தான் நமது இந்திய சர்க்கார் யுத்தப் பாட்டு விளம்பர இலாகா என்ற ஒன்றைப் புதிதாக ஏற்படுத்தியுள்ளார்கள். இதன் மூலம் நமது மாகாணத்தில் மூலை முடுக்குகளிலும் குக் கிராமங்களிலும் குட்டிப் பள்ளிக்கூடங்களிலும், நமது யுத்தப் பாட்டுக்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்ற பாஷைகளில் முழங்கி வருகின்றன. இசையைக் கேட்டு யுத்தப் பிரசாரக் கூட்டங்களுக்கு வரும் ஜனத் திரளின் எண்ணிக்கை எல்லா ஊர்களிலும் பெருகுகின்றது. இடையிடையே பிரசார விஷயங்களைப் பலதரப்பட்ட வர்ணமெட்டுகளிலும் இராகங்களிலும் கவர்ச்சி தரும் விதம் பாட்டுகளில் பாடப்படும்போது, பொது ஜனங்கள் வெகு உணர்ச்சியோடு அவற்றை செவிக்குணவாக ஏற்று, ருசித்து அனுபவிக்கிறார்கள். உண்மையுணர்ந்து யுத்தத்தில் சர்க்காரோடு பல விதத்தில் ஒத்துழைக்கிறார்கள். நம் யுத்த இசைப் பாட்டுகள் புத்தக ரூபத்தில் நாட்டில் புகுந்துள்ளன. பாடகர்கள் மூலம் பரப்பப்படுகின்றன. வானொலி மூலம் வழங்கப்படுகின்றன. பள்ளிக் கூடங்களில் பயிற்சி யளிக்கப்படுகின்றன. ரயில் வண்டிகளில் ரம்மியமாய்ப் பாடப்பட்டு ரசிக்கப்படுகின்றன. ரிக்கார்டுகள் மூலம் ரீங்காரம் இடுகின்றன. பிரசங்கங்களின் இடையே பிரசாரகர்களின் மூலம் பெரிதும் ஒலிக்கின்றன. எனவே, இந்த மாபெரும் யுத்தத்தில் நமது இந்திய நாட்டு மக்கள் அனைவரும் நல்லெண்ணத்துடன் சர்க்காருடன் எப்பொழுதும் ஒத்துழைத்து வெகு சீக்கிரத்தில் முழு வெற்றியையடைய நமது யுத்தப் பாட்டுகளும் இசையும் தினந்தோறும் ஊக்கிக் கொண்டு வருவதை நாம் தெளிவாகக் காண்கிறோம். காடு, மலை, கல், புல், கள்வர், கடவுள் இவர்களைக் கட்டுப்படுத்தி ஆளும் கானம், நாடு நகரங்களில் உள்ள நாகரிக மக்களைத் தன்வயப் படுத்தி அதன் மூலம் சகல நன்மையும் செய்யும்படி தூண்டுதல் என்பது ஆச்சரியமாகுமா? ஆகாது. ஆதலால் தான், இந்திய சர்க்காரின் நிர்வாக சபை அங்கத்தினராகிய ஸர் சுல்தான் அகமத் கொஞ்ச நாளைக்கு முன் பேசிய தன் பிரசங்கத்தில் கூறியுள்ளபடி, "ஏனைய விளம்பர முறைகளைக் காட்டிலும் இந்த யுத்தப் பாட்டு விளம்பர முறை தான் தலை சிறந்ததென நான் கருதுகிறேன். ஏனெனில், அது நம் நாட்டில் உள்ள மக்கள் எல்லோரையும் பணக்காரர், ஏழை, படித்தவர், பாமரர் என்ற பாகுபாடின்றிச் சரிசமமாகத் தாக்கித் தன்வயப்படுத்துகின்றது. இந்த நாட்டில் அதன் கவர்ச்சிக்கு ஆளாகாத பிரதேசமே கிடையாது. இந்த இலாகாவின் மூலம், பழங் காலத்துக் கலை முறையையும் தற்காலத் தேவைக்கு எவ்வாறு பண்புடன் பயன் படுத்திக்கொள்ள முடியும் என்பதை நாம் நிரூபித்துள்ளோம்."

(4-ம் பக்கம் தொடர்ச்சி)

பயப்படுகிறார்கள் நீங்கள் அருகில் ஏமாந்து மோந்து போய் விடாதேயுங்கள். போனால் காவு வாங்கிவிடும். முன்னொரு காலத்தில் ஒரு அதிகாரி இப்படி அசட்டுத்தனமாகச் சென்று இறந்து விட்டார்.''

"அடே, பிசாசு என்னை ஒன்றும் செய்யாது ; நான் அதற்குப் பயப்படமாட்டேன்''

"சுவாமி, வேண்டாம். இத்தனை இளவயதில் உயிர்விடவேண்டாம்.''

"என்னடா ! பிசாசு, படித்தவர்களைத் தொடாது.''

"வேண்டாம் சுவாமி, இன்றிரவு 12 மணிக்கு கவனித்துப் பாருங்கள்'' என்று எச்சரித்து விட்டுச் சென்றான்.

சிவராமோ இதனைச் சோதிக்க வேண்டும் என்று உற்சாகத்துடன் இருந்தான். உண்மையிலே தைரியசாலி; பிசாசுகள் என்றால் நம்பிக்கை இல்லை ; ஆகவே இந்த அசம்பாவிதத்தைச் சோதிக்க வேண்டும் என்றது அவன் எண்ணம்.

நள்ளிரவில் நூதன சப்தம்

அன்று இரவு 12 மணிக்கு, எழுந்து, குகைப்பக்கம் பார்த்தான். சிறிது நேரம் ஒன்றும் தெரியவில்லை. நிசப்தமாக இருந்தது. பிறகு ஏதோ கல் வெட்டுவதைப்போல் சப்தம் கேட்டது. 3, 4 பேர் பேசுவது போலும் கேட்டது. மினுக்கு மினுக்கு என்று வெளிச்சமும் தெரிந்தது. பயங்காளி யானால் அப்போதே ஓடி யிருப்பான். ஆனால் சிவராமோ பயப்படவில்லை. இந்த இரகசியத்தை பார்த்தே விடுகிறது என்று தீர்மானித்தான்.

மறுநாள் காலையில் ஆட்கள், வேலைக்கு வராததற்கு முந்தி பாலத்தின் மேல் நடந்து குகைக்குள் சென்றான். சிறிது வெளிச்சம் வந்திருந்தது. உள்ளே பாதி தூரத்தில் குகைக்கு ஒரு புறத்தில் பாறையில் சிறிது வெட்டப்பட்டிருந்தது. அந்த துவாரம் இரண்டு அங்குல ஆழம் இருக்கும். மேலே தோண்டின கற்கள் இருந்தன. சில உளிகளும் இருந்தன. அவைகளில் ஒன்றை எடுத்து வைத்துக் கொண்டான். அதில் தனக்குத் தெரியாத எழுத்துக்கள் வெட்டப்பட்டிருந்தன. யாருக்கும் தெரியாமல் நிலயத்திற்கு வந்து விட்டான். அன்று மாலை ஒருவருக்கும் தெரியாமல் பாலத்திற்கு கீழே பள்ளத் தாக்கில் சென்றான். ஒரு புதருக்குள்ளே பல சாமான்களும். கம்பிகளும் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. ஏதோ இரகசிய வேலை நடக்கிறது என்று கண்டு கொண்டான். அன்று இரவும் 12 மணிக்கு ஓசை கேட்டது. மினு மினு என்று வெளிச்சமும் தோன்றிற்று. பிசாசுகள் ஆடுகின்றன என்று சொல்லி ஆட்கள் நிலையத்திலும் படுத்துக் கொள்ளவில்லை. மறுநாள் உதயத்திலும் குகைக்குள் சென்றான். துவாரம் பெரிதாக வெட்டப்பட்டிருந்தது. அதற்குள் ஏதோ ஒரு இரும்புப் பெட்டி வைக்கப்பட்டிருந்தது. நிலத்திலே நீளக் கம்பியும் கிடந்திருந்தது. உடனே அங்கு கிடந்திருந்த ஒரு கடிதத்தை எடுத்துக் கொண்டு, அறைக்கு வந்து விட்டான். அன்று அடுத்த போலீசு ஆபீசுக்குச்செய்தி அனுப்பினான். அன்று மாலை வண்டியிலே ஒரு அதிகாரி வந்தார். முன் சாக்கிரதையாகவே வெறும் பிரயாணி போல் வந்தார். சிவராம் அவருக்கு உளியையும் கடிதத்தையும் காட்டினார். அது ஜப்பான் பாஷை என்று தெரிந்தது. யாருக்கும் தெரியாமல் அன்று மாலையே பள்ளத்தாக்குக்கு கைத்துப்பாக்கியுடன் சென்றார்கள். இரகசிய வேலை செய்து வருவது தெரிந்தது. உடனே அறைக்குத் திரும்பி வந்து, இரவுக்காக காத்துக் கொண்டிருந்தார்கள்.

ஜப்பான் குட்டு வெளியாதல்

இரவு 12 மணி ஆயிற்று. லொட் லொட் என்று சப்தம் கேட்டது. உடனே இருவரும் கருப்பு உடைபோட்டுக்கொண்டு துப்பாக்கியும் மின்சார விளக்குகளையும் எடுத்துக் கொண்டு பள்ளத்தாக்குக்குள் இறங்கினார்கள். புதருக்கு அருகில் வருகையில் யாரோ ஒருவர் பின் தொடருவது போல் காணப்பட்டது. சிவராம் ஒதுங்கிக் கொண்டான் அதிகாரி முன் சென்றான். அவர் தலையில் ஒரு அடி விழுந்தது. யாரோ பின்னிருந்து அடித்தது போல் தோன்றிற்று. அதிகாரி நிலத்தில் விழுந்தார். அங்கே ஒரு கம்பி இருந்தது. அக்கம்பியை பிடித்தார். கம்பி பிடிபட்டு இழுக்கப்படவே குகைக்குள் ஒரு பெரிய வெடி சப்தம் கேட்டது. அச்சத்தத்தால் மலை முழுதும் நடுங்கிற்று. பெரிய டைனமைட் வெடித்தது போல் பயங்கரமாக இருந்தது. உடனே அவனை அடித்த உருவம் 'ஓ' என்று அலறிக் கொண்டு ஓடிவிட்டது. சிவராம் அதைப் பிடிக்க முயன்றான் பிடிபடவில்லை. துப்பாக்கி எடுத்து சுட்டான். எதுவும் விழவில்லை. உடனே மின்சார விளக்கை எடுத்துப் பார்க்கையில் அதிகாரி மூர்ச்சித்துக் கிடந்தார். அவரை மெல்லத் துடைத்து எழுப்பினான். பிறகு ஞாபகம் வந்து எழுந்தார். மெதுவாக அவரை அழைத்துக் கொண்டு நிலயம் வந்து சேர்ந்தார்.

சூரியன் உதித்தவுடன், சில ஆட்களை இட்டுக் கொண்டு குகைக்குச் சென்றார்கள். அங்கே பாறைகள் வெடித்து கிடந்த அலங்கோலத்தைக் கண்டார்கள். பாறைகளுக்கு இடையே இரண்டு பிணங்களைக் கண்டார்கள். ஒன்று சிலம்பாடி வேடம் போட்டிருந்த வெளி நாட்டான். முகச் சாடை ஜப்பானியனைப் போலத் தோன்றிற்று. மற்றொன்று முனிராம். அவன் உடலைக் கண்டவுடன், சிவராம் ஆச்சரியப் பட்டான். அங்கே சோதித்துப் பார்க்கையில் தோண்டிய துவாரத்தில் டைனமைட் வைத்திருந்தார்கள் எனத் தெரிந்தது. அங்கிருந்து ஒரு கம்பி இணைத்து பள்ளத் தாக்கில் உள்ள புதருக்கு இணைப்பட்டிருந்தது. புதரிலிருந்து ஒரு ஆள் கம்பியை இழுத்தால் வெடி எழுப்பி குகையில் இருந்ததெல்லாவற்றையும் நாசம் ஆக்கி விடும். வேலை முழுதும் பூர்த்தி ஆகவில்லை. அதற்குள் அதிகாரி கம்பியின் மேல் விழுந்ததினால் வெடி குண்டு வெடித்து விட்டது.

"அடாது செய்வோர் படாது படுவர்"

மாறு வேடம் பூண்ட ஜப்பானியனும் அவனுக்கு ஒத்தாசை புரிந்த முனிராமும் உயிர் துறந்தார்கள். பள்ளத் தாக்கில் இருந்த துணைவனான ஜப்பானியன் அதிகாரியை அடித்துக் கொன்று விடலாம் என்று எண்ணினான். ஆனால் எதிர் பாராதபடி கம்பி இழுக்கப் பட்டு, குண்டு வெடித்தது. தன் நண்பன் இறந்திருக்க வேண்டும் என்று கண்டு ஓடிவிட்டான்.

உடனே அவனைத் தேடுவதற்குப் புறப் பட்டார்கள். குடிசைகளில் ஒன்று தீக்கு இரையாயிருந்ததைக் கண்டார்கள். அதில் இருந்த சாமான்கள் கடிதம் முதலியவை எல்லாம் சாம்பலாகி இருந்தன. ஊரில் விசாரிக்க, சென்ற 10 நாள்களாக அக்குடிசையில் இரண்டு லம்பாடிகள் இருந்தார்கள் என்றும் அவர்களுடன் முனிராம் பழகி வந்து கொண்டு இருந்தான் என்றும் தெரிந்தது. அன்று பின் ஜாமத்தில் அக்குடிசை தீப்பற்றி எரிந்தது என்றும் ஆட்களைக் காணோம் என்றும் வெளியாயிற்று. துப்பை மறைப்பதற்காக தீ வைத்துவிட்டு மறு ஜப்பானியன் ஓடிவிட்டான் எனத் தெரிந்தது. முனிராம் வீட்டில் சோதனை போட 500 ரூபாய் இருப்பதைக் கண்டார்கள். இது அவன் பெற்ற இலஞ்சம் என ஊகிக்கப்பட்டது. இலஞ்சம் வாங்கிக் கொண்டு துரோகம் செய்ததினால் தானே உயிர் துறந்தான்.

உடனே சர்க்கார் அதிகாரிகளுக்குச் செய்தி தெரிவிக்கப்பட்டது. அன்று வரவேண்டிய மெயில் நிறுத்தப்பட்டது. அது மாத்திரம் அல்ல. அன்று மாலை வர இருந்த சேனை ஸ்பெஷல் வண்டியும் வேறு வழியாகக் கொண்டு போகப்பட்டது. அவ்வித வண்டி ஒன்று வரப் போகிறது என்ற செய்தி சிவராமுக்கே தெரியாது. அப்படி இருக்க, அதனை அழிக்க வேண்டும் எண்ணத்துடன் வேலை செய்த ஜப்பானிய ஒற்றர்களுக்கு, எவ்வாறு தெரிந்ததோ என்பது ஆச்சரியம்.

பெரிய விபத்தைத் தவிர்த்த உபகாரத்திற்காக சிவராமுக்குப் பொற்பதக்கம் அளிக்கப்பட்டது. தவிர, அந்த நிலயத்திலிருந்து அவன் விருப்பத்தின்படி சமநிலத்திற்கு மாற்றப்பட்டது. சம்பளமும் 250 ரூபாய் ஆயிற்று. அடுத்த மாதமே பத்மாவை திருமணம் செய்துக் கொண்டு வெகு இன்பத்துடன் வாழ்ந்தான்.

(6-ம் பக்கம் தொடர்ச்சி)

என்று விட்டார்களாம் சவாரி மலைகளைப் பார்த்து. மலைகளில் தான் எலிகள் மாதிரிப் பதுங்கி விடுகிறார்களே! அவர்களுக்கு விமான உதவியும் வருவதே இல்லை. அவர்களது விமானங்கள் எல்லாம் எங்கு சென்றிருக்கின்றனவோ தெரியவில்லை. இப்படி விமான உதவியில்லாமலே எத்தனை காலம் ஆட்டம் போட முடியும்?

தென் நாட்டிலே எத்தனையோ பெரிய கொள்ளைக்காரர்கள் எல்லாம் இருந்திருக்கிறார்கள். அவர்களுடைய லீலைகள் எல்லாம் எவ்வளவு காலம் நடந்திருக்கின்றன? கேள்வி கேட்பார் இல்லாத இடமாக இருந்தால், எந்தக் கொள்ளைக்காரன் பாடும் வேட்டை தான். தென் நாட்டு கொள்ளைக்காரர்கள் எல்லாம் தேடி பிடிக்கப்பட்டு, பரிதாபமான முடிவையே அடைந்திருக்கிறார்கள். ஒவ்வொரு நாட்டிலும் இம்மாதிரியே தான் கொள்ளைக்காரர்களின் முடிவு இருந்திருக்கிறது.

இதே போல, இப்பொழுது இந்தியாவிற்குள் நுழைந்திருக்கும் குள்ளக் கொள்ளைக்காரர்களும் கொஞ்ச நாட்கள் கொட்ட மடிக்கக் கூடும். ஊசி குத்தக் கூட இடமில்லாத படியா, பாதுகாப்புப் படைகளை ஒரு நாட்டில் வைத்திருக்க முடியும்? ஏதோ ஒன்றிரண்டு இடங்கள் பலஹீனமாக இருப்பது தான். அதை விரோதி அறியமாட்டான் என்று அங்கே சுமாரான பாதுகாப்பிற்கு ஏற்பாடு செய்திருப்பது தான். அதை யறிந்து விரோதிகள் அந்த இடத்தைத் தாக்குவது தான். யுத்தத்தில் இதெல்லாம் சகஜம் தான். நாம் பார்க்க வில்லையா, விரோதிக்கு பலஹீனமான இடம் எது என்று? நோட்டம் பார்க்கச் செல்லும் கோஷ்டியினரும், விமானிகளும் இதையும் தானே பார்த்து வருகிறார்கள்.

வட பர்மாவில், இருமலைகளுக் கிடையில், சௌகரியமான இடம் ஒன்றிருக்கிறது; அங்கு போய் இறங்கி, ஒரு தலைமை நிலையத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். அப்புறம், ஜப்பானியரை வடக்கி லிருந்தும், அவர்களுக்குப் பின்னா லிருந்தும் வேதனைப் படுத்தலாம் என்று வீரர் வின்கேட் கண்டு கொண்டாரா இல்லையா? லார்ட் மவுண்ட்பேட்டனுடன் க்யூபெக் சென்று, இதையே ரகசியமாக எல்லோரிடமும் வர்ணித்துக் கூறி, தன்னிஷ்டப்படி செய்யும் அனுமதி பெற வில்லையா? பலர் இவரது முயற்சிக்குக் குறுக்கே விழுந்தும், இவர் சற்றும் சளைக்காது சாமர்த்தியமாக, தான் போட்ட திட்டப்படியே எல்லாவற்றையும் சாதித்து விட வில்லையா?

வின்கேட்டின் திட நம்பிக்கை

வின்கேட் துரைக்கு இம்மாதிரியான பயங்கரச் செயல்களைச் செய்வதில் அபார பிரியமாம். அபிஸீனியாவிலே பத்து வருடங்களுக்கு முன்பு நடந்த போரிலே, இவர் கொரில்லாப் படைகளைச் சிருஷ்டித்துக் கொண்டு, இத்தாலியர்களை அலற அடித்திருக்கிறார். ஈஸ்வரனிடத்தில் அபார பய பக்தி உள்ளவராம் இம்மனுஷர். எங்கு சென்றாலும் பைபிளைத் தன் கூடவே சுமந்து கொண்டு போவாராம். ஜப்பானியன் என்ன, அவன் தாத்தா என்ன, எவனானாலும் நமது உயர்ந்த திறமையால் வீழ்த்தி விடலாம் என்ற திட நம்பிக்கை உடையவராம் அவர்.

நடுக் காட்டிலே, விமானத்திலே போயிறங்கி, அந்த இடத்தை இராவேளைகளில் சுத்தப்படுத்தி, தனது விமானத்தை அங்கிருந்தே கிளம்பச் செய்து, மேற் கொண்டு ஏராளமான ஆட்களையும், மோட்டார்களையும், ஆயுதங்களையும், கோவேறு கழுதைகளையும் அந்த இடத்தில் கொண்டு இறக்கச் செய்தார் அவர். இப்பொழுது அந்த இடம் ஒரு பெரிய சீன விமானக் கூடம் மாதிரி ஆகிவிட்டதாம்.

உலகமே பிரமித்தது

இந்த இடத்திலிருந்தவாறே, ஜப்பானியரின் போக்கு வரத்து சாதனங்களுக்கு இடைஞ்சல் உண்டாக்க அங்குள்ளவர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். இது சம்பந்தமான விவரங்கள் வெளியான போது, உலகமே பிரமித்துப் போய் விட்டது, வின்கேட்டை எல்லோரும் வாயாரப் புகழ்ந்தார்கள். இதே வின்கேட்டை ஜப்பானியர் மனதார வைதிருப்பார்கள். அவர்களது பற்களில் ஒரு பல் நஞ்சுள்ளதாக இருந்திருக்க வேண்டும். அது தான் 39 வயது கூட சரியாக நிறையப் பெறாத வின்கேட் துரை சென்ற விமானம், பதினைந்து நாட்களுக்கு முன் ஏதோ கோளாறு காரணமாக, மலைகளுக்கிடையே விழுந்து நொறுங்கிவிட்டது. அநியாயமாக அகால மரண மடைந்தார் வின்கேட்.

ஆனால், அவர் விதைத்த விதை சொத்தையாகி விடாது. நாளடைவில் அது பெரிய மரமாகி, ஜப்பானியருக்கே கடும் பீதியை விளைவிக்கத் தான் போகிறது.

ஜப்பானியர் எதிர் பார்த்ததே யில்லை

ஜப்பானியர் இவ்வாறு இந்தியாவிற்குள் வந்திருக்கிறார்களே, இதற்கொரு காரணம் இருக்க வேண்டு மல்லவா? இருக்கிறது. பஸிபிக் பிரதேசத்திலே அமெரிக்கர்கள் அடிமே லடியாக சாத்திக் கொண்டே யிருக்கிறார்கள். அந்த ட்ருக் துறைமுகத்தைப் பற்றிப் பிரமாதமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்களே, அது இப்பொழுது அமெரிக்க குண்டுகளை அமோகமாக வாங்கிக் கொண்டு, துடிக்கிறது. அமெரிக்கக் கடற் படைத் தலைவர் மகா துணிச்சல் காரர். குள்ளர்களைக் குட்டியே தொலைக்க வேண்டு மென்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார் அவர். துணிந்தே ஜப்பானியரது சொந்தப் பிரதேசத்திற்குள் புகுந்து, வெளுக்கச் சொல்லுகிறார் தமது ஆட்களை. இப்படி அமெரிக்கர்கள் வருவார்கள் என்று ஜப்பானியர் எதிர் பார்த்ததே யில்லை. ஆகவே, எங்கு சென்றாலும் திகைப்பும், பிரமிப்பும், நஷ்டமுமாகவே இருக்கிறது.

இப்பொழுது அமெரிக்கக் கடற் படையை எதிர்த்துப் போராட ஜப்பானியக் கடற் படை சித்தமாக இல்லை. நாளை ஜப்பானிய மூலபூமிக்கே ஆபத்து வரக் கூடும் என்பதை, குள்ளர்கள் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அந்தச் சமயத்திற்குத் தேவையாக இருக்கும் என்று தங்கள் கப்பற் படையை மூலை முடுக்குகளில் பதுக்கி வைத்திருக்கிறார்கள்.

ஆனால், நாளாக ஆக, அமெரிக்காவின் கப்பற் படையின் பலமும் பெருகு மல்லவா? இப்போதுள்ளதை விட ஜப்பானியர் பாடு அப்பொழுது கடினமாகு மல்லவா?

'ஓ' என்று போயிருக்கும்

அது எப்படியாவது இருந்து விட்டுப் போகட்டும்; இப்போதைக்குத் தலையைக் காத்துக் கொள்ளலாம் என்று ஜப்பானியர் ஒதுங்கி யிருக்கிறாப் போலிருக்கிறது. இது நம்மவர்களுக்கும் ரொம்ப நல்லதாகி விட்டது. சிரமமின்றி, ஜப்பானியரைத் தாக்கும் வேலையைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மெள்ள மெள்ள ஒவ்வொரு இடமாக ஜப்பானியரது பிடியிலிருந்து நழுவுகின்றன. ஜெனரல் டோஜோவின் த்வனியும் வர வர மாறிக் கொண்டே யிருக்கிறது. 'ஜப்பானை யாரும் அணுகவே முடியாது, கீழ்த் திசைக்கு நாமே ராஜா!' என்று சொல்லிக் கொண்டிருந்தவர், 'நமது விதி வேறு விதமாக இருக்கிறாப் போலிருக்கிறது. அது நம்மைக் கொண்டு செல்லும் வழியே புதிதாயிருக்கிறது. ஜப்பானுக்குப் புது ஆபத்துக்கள் வரக் கூடும். ஆகவே நாம் எதற்கும் சித்தமாக இருக்க வேண்டும்' என்று பேசத் தொடங்கி விட்டார். ஜப்பானிய மக்களுக்கு 'ஓ' என்று போயிருக்கும்.

அவர்களுடைய ஆதரவைத் தொடர்ந்து பெறவும், அவர்களைக் குஷிப் படுத்தவும், ஜப்பானியத் தலைவர்கள் கூடிப் பேசி, இப்படி இந்தியா மீது படை யெடுக்கும் அசட்டுக் காரியத்தைச் செய்து விட்டு, அதைக் குறித்து தங்கள் ரேடியோக்களில் பிரமாதமாகத் தமுக்கடிக்கத் தொடங்கி யிருக்கிறார்கள். ஜப்பானியர் இந்தியாவிற்குள் வந்ததைக் கேள்விப்பட்டு, இந்தியாவில் புரட்சியின் வேகம் அளவு மீறி விட்டதாம் இது ஒரு ஜப்பானிய ரேடியோ கதை. இந்தப் புளுகுக்கு ஈடு எங்குமே இல்லை என்னலாம்.

எது வேண்டுமானாலும் பேசலாம்

ஜப்பான் இப்பொழுது எது வேண்டுமானாலும் பேசலாம். ஆனால், இந்தப் பேச்செல்லாம், விதியின் முடிவை அணுகியவன் பிதற்றும் பிதற்றலே யாகும். இதில் சந்தேகமே யில்லை.

அவர்கள் திமிர் கொண்டு செய்யும் காரியங்கள் எல்லாவற்றையும் நேச தேசத்தவர்கள் குறித்து வைத்துக் கொண்டு தானிருக்கிறார்கள்.

இந்திய ஆபீஸர்களைக் கொண்டு கக்கூஸ்களை சுத்தம் செய்யும்படி சொல்லுகிறார்களாம். ஒரு இந்திய ஆபீஸருடைய பணத்தை ஒரு ஜப்பானியர் திருடிவிட்டாராம். அதை அந்த இந்திய ஆபீஸர் மேலதிகாரிகளிடம் தெரிவித்தாராம். அதற்கு என்ன பலன் கிடைத்தது தெரியுமா? தவடையிலே நாலடி கிடைத்ததாம். மோல்மீனிலிருந்து ரங்கூனுக்கு சில இந்தியக் கைதிகள் இடம் மாற்றப் பட்டார்களாம். வழியிலே சிலருக்கு வயிற்றுக் கடுப்பு ஏற்பட்டதாம். உடனே அவர்களை ஜப்பானியர் தண்ணீரில் தூக்கி

(12-ம் பக்கம் பார்க்க)

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும், ஜெர்மனியும்.

மார்ச்சு 29.—ஐரோப்பா சம்பந்தமாக ஒரே மாதிரிக் கொள்கையைத் தான் நேச நாடுகள் கையாளுகின்றன வென்று மிஸ்டர் ஈடன் கூறினர்.

மார்ச்சு 30.—அட்லாண்டிக் பிரகடன மும் அதன் கொள்கைகளும் பிரிட்டனின் முக்கியமான நோக்கமாயிருக்கு மென்று காமன்ஸ் சபையில், மிஸ்டர் சர்ச்சில் குறிப் பிட்டார்.

அமெரிக்காவும், அட்லாண் டிக்கும்.

மார்ச்சு 29.—அமெரிக்கா நேச நாடு களுக்கு குத்தகைக் கடன் சட்டப்படி உதவி யுள்ள யுத்தப் பொருட்களைக் குறித்து, அமெரிக்காவின் வெளிநாட்டுப் பொரு ளாதார நிர்வாகி மிஸ்டர் லியோ க்ரோலி ஒரு அறிக்கை விடுத்தார்.

யு. என். ஆர். ஆர். ஏ. வேலையில் அமெரிக்கா ஈடுபடுவதை அனுமதித்து அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் ஒரு சட் டத்தில் கையெழுத்திட்டார்.

இராணுவ வேலைகளுக்குத் தகுதி யற்றவர்கள் என்று ஒதுக்கப்பட்ட 35 லட்சம் அமெரிக்கர்களையும் இன்றியமை யாத கைத் தொழில்களிலாவது, தொழி லாளர் படைகளிலாவது சேர்த்துக் கொள்ள வேண்டிய சமயம் வந்து விட்ட தென்று, அமெரிக்க யுத்த உதவி மந்திரி மிஸ்டர் ராபர்ட் பாட்டர்ஸன், பிரதிநிதிகள் சபையின் இராணுவக் கமிட்டியாரின் முன் கூறினர்.

மார்ச்சு 30.—ஆகாயத்தில் எதிரிகளின் 9,463 விமானங்களையும், தரையில் 1,579 விமானங்களையும் அமெரிக்க விமானப் படைகள் நாசஞ் செய்தன வென்றும், 1944-ம் ஞூ ஜனவரி மீ 1௳, அமெரிக்கா வின் படைகளில் மூன்றிலொரு பங்கு வெளி நாடுகளிலிருந்ததாகவும், இந்த வருஷக் கடைசிக்குள் இது இரண்டு பங்கு உயர்ந்து விடுமென்றும், அமெரிக்க யுத்த மந்திரி மிஸ்டர் எச் எல். ஸ்டிம்ஸன் தெரி வித்தார்.

இந்தியா, பர்மா, இலங்கை.

மார்ச்சு 30.—தென் கிழக்காசியப் படை தலைவர் காரியாலயத்தினின்று வெளிவந்த அறிக்கை, கீழ்க் கண்டவாறு கூறுகிறது :—மாங்டாவுக்குத் தெற்கே, கரையோரமாகவுள்ள சம வெளியில், சென்ற 24 மணி நேரமாக இருதரத் தாரும் போராடிக் கொண்டிருந்தார்கள். மாங்டா-பூதிடாங் ரஸ்தாவிலுள்ள குகைப் பாதையின் மேல் பகுதி கைப்பற்றப் பட்டது.

பர்மாவில் மகா வீரத்தோடு போராடி மரண மடைந்த லெப்டினென்ட் ஆலன் ஜார்ஜ் ஹார்உட் டி. ஸி. எம்.-க்கு அவர் இறந்து போன பிறகு, 'விக்டோரியா' வீரப் பதக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது.

மார்ச்சு 31.—அஸ்ஸாம் பர்மா போர் முனை பற்றி மேன்மை தங்கிய பிரதம படைத் தலைவர் மத்திய சட்ட சபையில் ஒரு அறிக்கை விடுத்தார்.

மாங்டாவுக்குத் தெற்கே நேச நாட்டுப் படைகள் கரையோரமாகவுள்ள சம வெளி களிலும் மலை யடிவாரங்களிலும் கடுமை யாகத் தாக்கிப் போராடியதாக நேச நாடு களின் தலைமைப் படைக் காரியாலய அறிக்கை கூறுகிறது.

டிட்டிம்-இம்பால் ரோட்டிலும், பலே லுக்கு அருகிலும் எதிரியின் தாக்குதல் கடுமையாகத் தான் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. தாமுவுக்கு அருகே யுள்ள நேச நாடுகளின் இடங்களை எதிரி கள் குண்டுகளை வீசித் தாக்குகிறார்கள்.

ரஷ்யாவும், பின்லாந்தும்.

மார்ச்சு 29.—ரஷ்யப் படைகள் ப்ருத் ஆற்றைக் கடந்து விட்டன. செர்னுடி நகரப் புரங்களில் போர் நடக்கிறது. ஒடெஸ்ஸா போர் ஆரம்பமாகி விட்டது. **கொலொமியா, பால்டா, கிர்வாய் ஒசிரோ, போல்ஷயா-ப்ராடி யேப்கா, யஸ்ட்ரி பினேப்கா, மோல்டாப்கா** ஆகியவற்றை செம்படைகள் கைப்பற்றிக் கொண்டன.

பின்லாந்துக்கும் ரஷ்யாவுக்கும் மீண்டும் சமரசப் பேச்சுகள் நடைபெறுவ தாகத் தெரிகிறது.

மார்ச்சு 30.—புகோனுவின் தலைநக ரான **செர்னுட்டி**, துமாஷ்-நடி போர்னு, டெலியேடின், ஓபெர்டின், சப்லொ டோப், லிப்கனி, ரிப்னிடோ, லியுபெ டோப்கா, மொஸ்டோபோயா, வெசலி னேபோ, வாக்பெரோப்கா, முதலிய பல விடங்களையும் செம்படைகள் கைப்பற்றின.

மார்ச்சு 31.—கிஷினேப்-ஜாஸி ரயில்வே லைனை செம்படைகள் வெட்டி விட்டன. **டுஸேப்டாய், ஒச்சகாப்** ஆகிய இடங்களை சோவியத் படைகள் கைப்பற்றிக் கொண் டன. செக்கோஸ்லோவேகிய எல்லைப் புறத்திற்கு, 15 மைல்களுக்கு அப்பாலும், ருமேனிய எல்லைப் புரத்திலுள்ள புகோ வினுவுக்கு 10 மைல்களுக்கு அப்பாலும் சோவியத் படைகள் இருக்கின்றன. டாபானி, கப்லேப்கா, க்ரிவா, மமலிகா, கொடொபோக், அனனியேப் முதலிய ஊர்களை செம்படைகள் கைப்பற்றின.

வட சக்காலினில் உள்ள எண்ணைக் கிணறுகளையும் நிலக்கரிச் சுரங்கங்களையும் ஜப்பானிய அரசாங்கம் சோவியத் அரசாங் கத்திடம் ஒப்புவித்து விடுவதாக ஒரு ஒப் பந்தம் கையெழுத்தானது.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்திய தரைக் கடல் பகுதி.

மார்ச்சு 30.—"நாம் எதிர் பார்த்தது போல் நடவாமல், காசினோவில், போர்க் கொடுமை யடங்கி விட்டதென்று அமெ ரிக்க யுத்த மந்திரி மிஸ்டர் எச். எல். ஸ்டிம்சன் கூறினர்.

ஆன்சியோ போர்முனையில் தலை சிறந்த வீரத்தோடு போராடியதற்காக, காப்டன் வில்லியம் சிட்னிக்கு மாட்சிமை தங்கிய மன்னர் பிரான் 'விக்டோரியா' வீரப் பதக்கம் அளித்திருக்கிறார்.

விஷி, சுயேச்சை பிரான்சு, எதிரி வயப்பட்ட நாடுகள்.

மார்ச்சு 29,—போலந்து ஸ்தானீகர் எம். சீச்சனேப்ஸ்பி, அமெரிக்க மந்திரி யான கார்டெல் ஹல்லிடம் மிஸ்டர் ரூஸ் வெல்டிடம் சேர்ப்பிசகும்படி ஒரு கடி தத்தைக் கொடுத்திருக்கிறார். ரஷ்ய-போலந்து தகராறைத் தீர் க்கும் பொருட்டு செய்யப்படும் புதிய முயற்சியின் ஆரம்ப மாக அது இருக்கலாம்.

மார்ச்சு 30.—பல்கேரியத் தலைநகரான சோபியா நகரத்தை நேச நாடுகளின் விமானப் படை கடுமையாகத் தாக்கியது.

நடு நிலைமை நாடுகள்.

மார்ச்சு 29.—சுவித்சர்லாந்துக்கும் ரஷ்யாவுக்கும் மீண்டும் உறவு ஏற்பட வேண்டு மென்னும் பிரச்சினையை சுவிச்சர்லாந்து பெடரல் கௌன்சில் ஒப் புக் கொண்டது.

தூரக் கிழக்கு நாடுகள்.

மார்ச்சு 29.—மலேயாவில் கைதியான ஆஸ்திரேலியர்கள் அனைவரும் விடுவிக்கப் படும் வரை, பசிபிக் யுத்தம் நடந்து கொண்டு தானிருக்கு மென்று ஆஸ்தி ரேலிய முதன் மந்திரி மிஸ்டர் ஜான் கர்ட்டின் கூறினர்.

மார்ச்சு 30.—ஜப்பானியர்களின் மகத் தான கப்பற் படைத் தளமான ட்ரக்கை நேச நாட்டுப் படைகள் தாக்கி 49 எதிரி விமானங்களை நாச மாக்கின.

(11-ம் பக்கம் தொடர்ச்சி)

எறிந்து விட்டார்களாம். எவ்வளவு காருண்யம்! எத்தகைய வைத்தியம்! இதற்கெல்லாம் ஜப்பானியக் குள்ளர்கள் பதில் சொல்லியே தீரவேணும்.

இப்போதைக்கு, அஸ்ஸாமிலே, பர்மா பாதைக்குப் பதிலாக ஒரு புதுப் பாதையை கொச்சி, மலையாளம் ஆகிய பிரதேசங்களி லிருந்து அழைத்துச் சென்ற திறமை மிக்க ஆட்களைக் கொண்டு சிருஷ்டித்திருக் கிறார்கள். அந்தப் பாதையை அழிக்க ஜப்பானியர்கள் நினைத் திருக்கலாம். அந்த நினைவிலே மண்ணைப் போட, வீரர் வின்கேட்டின் யோசனையின் பயனாக, நடு பர்மாவில் போயிறங்கிய படையினர் பெரி தும் உதவக் கூடும்.

ஜப்பானியர் மணிப்புரிக்குள் நுழைந்து விட்டால் குடி முழுகிப் போய் விடவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம். ஜப்பானி யர் துடிதுடித்துப் பின் வாங்கி ஓடும் போது கிளம்பும் ஓலம், நிச்சயமாக நமது செவி களில் வந்து கூட விழத் தான் போகிறது. இதில் சந்தேகமே யில்லை. குள்ளனின் இடுப்பு சீக்கிரமே ஒடிபடத் தான் போகிறது.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.